# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 236 ஆடி 17

Regd. No.CBE/090/2011-2013

கோவை, சனி, ஆகஸ்ட் 02, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்த வாய்ப்பு: இந்தியா மீதான புதிய வரி விதிப்பு; ஆக.,7க்கு தள்ளி வைத்தார் ட்ரம்ப்**


....2-ம் பக்கம்

**ஓட்டுகளை திருடுகிறது: தேர்தல் ஆணையம் மீது ராகுல் மீண்டும் குற்றச்சாட்டு**

...3-ம் பக்கம்

**டிசம்பரில் இந்தியா வருகிறார் கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸி: தோனியுடன் விளையாடுகிறார்?**

....6-ம் பக்கம்



### தமிழ்நாடு முழுவதும் 1,256 மருத்துவ முகாம்கள்:

# 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் இன்று தொடக்கம்

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைக்கிறார்

சென்னை, ஆக. 02-

**'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைக்கிறார். இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 1,256 முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த முகாம்களில் இதயம், அறுவை சிகிச்சை, பொது மருத்துவ நிபுணர்கள் இந்த முகாம்களில் பங்கேற்கின்றனர்.**

### முன்னேறிய மாநிலமாக

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- 2021-ம் ஆண்டு நமது திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உன்னதமான நோக்கத்தை நமது திட்டங்கள் வழியாகச் செயல்வடிவத்தில் கொண்டுவந்து, தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் முன்னேறிய மாநிலமாக உயர்த்திக் காட்டியிருக்கிறோம். அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்டத்து வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி என்ற அடிப்படையில், ஒவ்வொரு மனிதரின் தேவைகள், கோரிக்கைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைச் செய்து தரும் வகையில், அனைத்துத் திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

### மக்கள் பிரதிநிதிகள்...

கடந்த 21.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில், "உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்" என்று அறிவித்தார். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, இன்று "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்களை, சென்னை செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் நடைபெறவுள்ள இந்தச் சிறப்பு மருத்துவ முகாம்களில் அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.

### தமிழகம் முழுவதும்....

ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், ஒரு மண்டலத்திற்கு ஒரு முகாம் வீதம் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 4 முகாம்கள் வீதம் 10 லட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 3 முகாம்கள் வீதம் மக்கள் தொகை 10 லட்சத்திற்குக் குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும் என மொத்தம் 1,256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

### பின்தங்கிய மக்களுக்கு

இம்முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட உள்ளன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக-பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளன.

### ஒவ்வொரு சனிக்கிழமைகளில்...

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இம்முகாம்களில் ரத்த அழுத்த பரிசோதனை மற்றும் அனைத்துப் பயனாளிகளுக்கும் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, முழுமையான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை, சிறுநீரகச் செயல்பாட்டு பரிசோதனைகள் (யூரியா, கிரயாட்டினின்) செய்யப்பட்டு, மருத்துவ முகாமிலேயே பயனாளிகளின் பரிசோதனை விவரங்கள் அவர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக உடனடியாக தெரிவிக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அனைத்து துறைகளும்

இந்த நிலையில், முதல்வர் இன்று தொடங்கி வைக்கும் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தில் அனைத்து துறைகளும் இணைந்து செயல்படும் என்று கூடுதல் தலைமைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். மேலும் அவர் கூறியதாவது:- ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். மருத்துவ முகாம்களில் சோதனை முடிவுகள் அன்று மாலையே அளிக்கப்படும் சுகாதாரத்துறை திட்டமாக இருந்தாலும் அனைத்து துறைகளும் இணைந்து செயல்பட உள்ளன. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளும் பங்கேற்பர். உப்பு, சர்க்கரை, எண்ணெயை சற்று குறை என்ற விழிப்புணர்வு நிகழ்வுகளும் முகாம்களில் நடத்தப்படும் என்றார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறையின் சார்பில் திருவண்ணாமலையில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63.200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதில் அமைச்சர்கள் எ.வ.வேலு, டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில் புதிதாக அமைகிறது:

# ரூ.37 கோடியில் மினி டைடல் பூங்கா; முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்

சென்னை, ஆக. 02-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் ரூ. 37 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, மத்திய அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 2000-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

'அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி' என்பதை முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 லட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ முதல்வர் ஸ்டாலினால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும், 5.57 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, முதல்வர் ஸ்டாலினால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை மேலும் விரிவுபடுத்தும் வகையில், ஓசூரில் ரூ.400 கோடி செலவில் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

திருப்பூர், வேலூர் மற்றும் காரைக்குடி மினி டைடல் பூங்காக்களின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, திருவண்ணாமலையில் ரூ. 37 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார். இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் அப்பகுதிகளில் வசித்துவரும் பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தங்கி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன், அப்பகுதிகள் சமூக-பொருளாதார வளர்ச்சியடையவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எதிர்க்கட்சிகள் தொடர் அமளி:

# பார்லி. 4-ம் தேதி வரை ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஆக. 01-

**பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டதால் இரு அவைகளும் வரும் திங்கள்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டன.**

பாராளுமன்றம் வழக்கம் போல் நேற்று காலை 11 மணிக்குக் கூடியது. சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் மக்களவை கூடியது. கேள்வி நேரம் தொடங்கியதும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் அவையில் அமளியில் ஈடுபட்டனர். பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இதனை ஏற்க மறுத்த சபாநாயகர் ஓம் பிர்லா, கேள்வி நேரம் தொடரும் என்றும் உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த சபாநாயகர் ஓம் பிர்லா, உங்கள் அணுகுமுறை மிகவும் தவறானது. இது போல் அமளியில் ஈடுபடுவதற்காக உங்களை மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை. மக்கள் தங்கள் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் நீங்கள் பேச வேண்டும் என்பதற்காகவே உங்களை தேர்ந்தெடுத்துள்ளார்கள் எனக் கூறினார்.

சபாநாயகரின் வார்த்தைகளை ஏற்க மறுத்த உறுப்பினர்கள், அவரது இருக்கையை முற்றுகையிட்டு கோஷங்களை எழுப்பினர். இதையடுத்து, அவையை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதேபோல், மாநிலங்களவை அதன் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையில் கூடியது. அப்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினர். இதை ஹரிவன்ஷ் ஏற்க மறுத்ததை அடுத்து அவர்கள் அமளியில் ஈடுபட்டனர். நீண்ட நேரம் அவர்களை சமாதானப்படுத்த ஹரிவன்ஷ் முயன்றார். எனினும், எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கோஷங்களை எழுப்பியதால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

# ஜூலை மாத ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.96 லட்சம் கோடியாக உயர்வு

புதுடில்லி, ஆக.02-

**கடந்த ஜூலை மாதத்துக்கான நாட்டின் ஜி.எஸ்.டி., வசூல் 1.96 லட்சம் கோடி ரூபாய் ஆக அதிகரித்து உள்ளது. இது கடந்த ஆண்டு(2024) ஜூலை மாதம் வசூலான 1.73 லட்சம் கோடியை விட 7.5 சதவீதம் அதிகம் ஆகும்.**

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: கடந்த ஜூலை மாதம் ஜி.எஸ்.டி. மூலம் ரூ.1,95,735 கோடி வசூல் ஆகி உள்ளது.

இதன் மூலம் தொடர்ச்சியாக 7 மாதமாக ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.8 லட்சம் கோடியை தாண்டி உள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் - ஜூலை மாத்தை விட இந்த ஆண்டு அதே காலகட்டத்தில் ஜி.எஸ்.டி. வருமானம் 10.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தாண்டு 3 மாதத்தில் மட்டும் ரூ.8,18,009 கோடி கிடைத்துள்ளது.

2025ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கான நாட்டின் ஜி.எஸ்.டி., வசூல் 6.20 சதவீதம் உயர்ந்து, 1.84 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. ஜி.எஸ்.டி. வரலாற்றில், கடந்த ஏப்ரல் அதிகபட்சமாக ரூ.2.37 லட்சம் கோடி வசூலாகி சாதனை படைத்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

# வரும் செப்டம்பர் 9-ம் தேதி துணை ஜனாதிபதி தேர்தல்

## இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு

| | | |
|---|---|---|
| 1) | தேர்தல் அறிவிப்பு நாள் | ஆக., 07. |
| 2) | வேட்புமனு கடைசி நாள் | ஆக., 21. |
| 3) | வேட்புமனு பரிசீலனை | ஆக.,22. |
| 4) | வேட்புமனு திரும்பப்பெற கடைசி நாள் | ஆக., 25. |
| 5) | வாக்குப்பதிவு | செப்டம்பர் 9-ம் தேதி. |
| 6) | வாக்கு எண்ணிக்கை - முடிவு | செப்டம்பர் 9-ம் தேதி. |

புதுடெல்லி, ஆக. 02-

**ஜெகதீப் தன்கர் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, நாட்டின் 17வது துணை ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் வரும் செப்.,9ம் தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அன்று காலை 10 மணி முதல் 5 மணி வரை தேர்தல் நடைபெறும். அன்றைய தினம் மாலையே முடிவுகள் அறிவிக்கப்படும்.**

பார்லிமென்ட் மழைக்கால கூட்டத்தொடர் கடந்த ஜூலை 21ம் தேதி தொடங்கிய போது, ராஜ்ய சபாவை துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் நடத்தினார். அன்றைய தினம் இரவே திடீரென துணை ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக ஜக்தீப் தன்கர் அறிவித்தார். மேலும், தன் ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு அனுப்பி வைத்தார்.

அதில், மருத்துவ காரணங்களுக்காக பதவி விலக முடிவு எடுத்ததாக ஜக்தீப் தன்கர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 2022ல் துணை ஜனாதிபதியாக அவர் பொறுப்பேற்றிருந்தார். இந்த நிலையில், 17வது துணை ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் வரும் செப்.,9ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட

# 8 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஆக. 02-

**தமிழகத்தில் இன்று முதல் ஆக.7-ம் தேதி வரை சில மாவட்டங்களில் கனமழையும், ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம், இன்று தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக இன்று முதல் ஆக.7-ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று (ஆக.2) டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை புதுக்கோட்டை மற்றும் கடலூர், விழுப்புரம், அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 3-ம் தேதி டெல்டா மாவட்டங்கள், கடலூர், காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், கன முதல் மிக கனமழையும், அரியலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.


4-ம் தேதி கடலூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி மாவட்டங்கள், கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -585.67 | -203.00 |
| பாயிண்ட் 80,599.91 | பாயிண்ட் 24,565.35 |



**தங்கம்** 1 சவரன் ₹73,200 — 1 கிராம் ₹9,150



**வெள்ளி** 1 கிலோ ₹123,000 — 1 கிராம் ₹123.00

**டாலர்** ₹87.16

**பெட்ரோல்** ₹100.75 — **டீசல்** ₹92.34

### புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்த வாய்ப்பு:

# இந்தியா மீதான புதிய வரி விதிப்பு; ஆக.,7-க்கு தள்ளி வைத்தார் ட்ரம்ப்

**வாஷிங்டன், ஆக.02-**

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு விதிக்கப்பட்ட புதிய வரி விதிப்பு இன்று அமலுக்கு வர இருந்த நிலையில், ஆக., 7ம் தேதி அமலுக்கு வரும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.



ரஷ்யா மற்றும் சீனாவுடன் இந்தியா வர்த்தகம் செய்வதற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்ப்பு தெரிவித்து வந்த ட்ரம்ப், இந்தியா மீது 25 சதவீதம் வரி விதிப்பதாக அறிவித்தார். இந்த புதிய வரி விதிப்பு ஆக.,1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அவரது இந்த அறிவிப்பை கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ள மத்திய அரசு, இந்த வரிவிதிப்பால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆராய்ந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்திருந்தது.

இதனியே, இந்த வரிவிதிப்பை எப்படி சமாளிப்பது என்பது குறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஸ் கோயல் ஆகியோர் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், இந்தியா உள்பட பிற நாடுகளுக்கு விதிக்கப்பட்ட புதிய வரி விதிப்பை அடுத்த ஒரு வாரத்திற்கு ஒத்திவைப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அதாவது, ஆக.,7ம் தேதி வரை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த காலகட்டத்தில் வரிவிதிக்கப்பட்ட நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அமெரிக்கா புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதாக பார்க்கப்படுகிறது.

### அரசு நிகழ்வில் பங்கேற்க

# ஆட்டோவில் சென்ற சந்திரபாபு

**கடப்பா, ஆக.02-**

ஆந்திர முதல்வர் சந்திரபாபு அரசு நிகழ்வு ஒன்றில் பங்கேற்க ஆட்டோவில் சென்று அனைவரின் கவனத்தை ஈர்த்தார்.



ஆந்திர மாநிலம், கடப்பாவில் அரசு சார்பில் ஓய்வூதியம் வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பங்கேற்க ஹெலிகாப்டரில் வந்திறங்கிய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, பின்னர் ஹெலிபேடு தளத்தில் இருந்து நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு ஆட்டோவில் சென்றார்.

ஆட்டோவில் பின்புற இருக்கையில் அமர்ந்து பயணித்த அவர், நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை அடைந்ததும் ஓட்டுநருக்கு அருகில் அமர்ந்து புகைப்படமும் எடுத்துக்கொண்டார். தொடர்ந்து ஆட்டோவுக்கான பயணக் கட்டணத்தை கொடுத்த சந்திரபாபு நாயுடு நிகழ்ச்சியில் பங்கேற்க சென்றார்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு ஆட்டோவில் வந்திறங்கியது நிகழ்ச்சியில் பங்கேற்றோர் மத்தியில் கவனம் பெற்றது.



**முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், அமைச்சர் இராஜேந்திரன் சந்தித்து, தமிழ்நாட்டிலுள்ள 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு புதுடெல்லியில் 3.7.2025 அன்று நடைபெற்ற விழாவில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் சம்மேளனத்தால் வழங்கப்பட்ட விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். கள்ளக்குறிச்சி-2 மற்றும் அரூர், சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இலாப பங்கீட்டு ஈவுத்தொகையாக 22 கோடியே 60 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

# ஹஜ் பயணத்திற்கு விண்ணப்பிக்க மேலும் காலஅவகாசம் நீட்டிப்பு

**சென்னை, ஆக. 02-**

2026-ம் ஆண்டு ஹஜ் பயணம் செல்வோர் விண்ணப்பிக்க ஜூலை 30-ந்தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் தற்போது கூடுதலாக ஒரு வார காலஅவகாசம் அளிக்கப்பட்டு உள்ளது. அதன்படி வருகிற 7-ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனை இந்திய ஹஜ் அசோசியேசன் உறுதி செய்துள்ளது.

எனவே ஹஜ் பயணம் செல்வோர் வருகிற 7-ந்தேதி வரை விண்ணப்பத்திற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. விடுபட்டவர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம். மேற்கண்ட தகவலை இந்திய ஹஜ் அசோசியேஷன் தலைவர் பிரசிடென்ட் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

# மாணவர்கள் சேர்க்கையில் அரசு பள்ளிகள் சாதனை

**சென்னை, ஆக. 02-**

தமிழக அருசு பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையில் சாதனை படைத்துள்ளது.

தமிழகத்தில் நிகழ் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 4 லட்சத்தை கடந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசுப் பள்ளிகளில் நிகழ் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை மார்ச் 1-ம் தேதி தொடங்கியது. இதுவரை 4,00,364 மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். இது கடந்த ஆண்டை விட 76 ஆயிரம் கூடுதலாகும். இந்தக் கல்வியாண்டில் மழலையர் வகுப்பில் 32,807 பேர், முதலாம் வகுப்பு தமிழ் வழியில்-2,11,563 பேர், ஆங்கில வழியில் 63,896 பேர், 2 முதல் 8-ம் வகுப்பு வரை 92,098 பேர் சேர்ந்துள்ளனர்.

இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை அலுவலர்கள் கூறியதாவது: பல்வேறு வசதிகளுடன் கூடிய உள்கட்டமைப்பு, கற்றல் செயல்பாடு உள்ளிட்ட அம்சங்களால் அரசு பள்ளிகள் மீது பெற்றோருக்கு நம்பிக்கை அதிகரித்துள்ளது. மேலும், அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசு நலத்திட்ட உதவிகள், உயர் கல்வியில் இட ஒதுக்கீடு போன்றவற்றால் சேர்க்கை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் தொடக்கக் கல்வி துறையில் 58 கல்வி மாவட்டங்கள் உள்ளன. முதலாம் வகுப்பு மாணவர் சேர்க்கையில் தென்காசி கல்வி மாவட்டம் 8,571 மாணவர்கள் எண்ணிக்கையுடன் முதலிடம் பிடித்துள்ளது. மிக குறைந்த அளவாக நீலகிரி கல்வி மாவட்டம் 1,022 மாணவர் சேர்க்கையுடன் கடைசி இடத்தை பிடித்துள்ளது.

முதலாம் வகுப்பில் அதிக மாணவர்கள் சேர்ந்துள்ள முதல் 10 கல்வி மாவட்டங்கள் விவரம்: தென்காசி- 8,471, திண்டுக்கல்-8,000, திருச்சி - 7,711, கள்ளக்குறிச்சி - 7,554, திருவண்ணாமலை- 7,386, சிவகாசி- 6,809, திருப்பூர்- 6,777, திருவாரூர்- 6,592, கோயம்புத்தூர்- 6,423, திருப்பத்தூர்- 6,418. குறைந்த எண்ணிக்கையில் மாணவர் சேர்க்கை செய்த பத்து கல்வி மாவட்டங்கள் விவரம்: நீலகிரி- 1,022, தேனி- 2,207, ஒட்டன்சத்திரம்- 2,480, தாராபுரம்- 2,594, பொள்ளாச்சி- 2,597, அரியலூர்- 2,625, பெரம்பலூர்- 2,636, வள்ளியூர்- 2,748, கரூர் - 3,077, சிவகங்கை- 3,223. இவ்வாறு தெரிவித்தனர்.

# இம்ரான்கான் ஆதரவாளர்கள் 166 பேருக்கு 10 ஆண்டு சிறை

### பாகிஸ்தான் நீதிமன்றம் அதிரடி

**லாகூர், ஆக. 02-**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக் - இ - இன்ஸாஃப் கட்சியைச் சேர்ந்த 166 உறுப்பினர்களுக்கு, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த 2023-ம் ஆண்டு இம்ரான் கான் ஊழல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதன்போது, பஞ்சாப் மாகாணத்தில் அவரது ஆதரவாளர்கள் நடத்திய போராட்டத்தில் கலவரம் ஏற்பட்டது. இதில் புலனாய்வுத் துறை அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களும், ராணுவத் தளவாடங்களும் போராட்டக்காரர்களால் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்நிலையில் ஃபைசலாபாத்திலுள்ள பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம், இந்த வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்ட நிலையில் 185 பேரில், 108 பேருக்கு, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது. 77 பேர் விடுதலைச் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஃபைசலாபாத் நகர காவல் நிலையம் மீதான தாக்குதலில் குற்றம்சாட்டப்பட்ட 58 பேருக்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தேசிய சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ஒமர் அயூப், பாகிஸ்தான் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஷிபிலி ஃபராஸ், சார்தாஜ் குல், ஷாஹிப்சடா ஹமித் ரஸா உள்ளிட்ட இம்ரான் கான் கட்சியின் மூத்த 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

# லண்டனில் சீக்கிய இளைஞர் கொலை

**பிரிட்டன், ஆக. 02-**

பிரிட்டனில் சீக்கிய இளைஞர் கொலை செய்யப்பட்ட நிலையில் பெண்கள் உள்பட 5 பேர் போலீசார் கைது செய்தனர்.

பிரிட்டனில் சீக்கிய இளைஞர் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அந்த நபர் 30 வயதான குர்முக் சிங் அல்லது கேரி என அடையாளம் காணப்பட்டார். அவர் பிரிட்டன் குடிமகன் ஆவார்.

கடந்த ஜூலை 23-ம் தேதி கிழக்கு லண்டனின் இல்ஃபோர்டில் உள்ள ஃபெல்பிரிட்ஜ் சாலையில் அவர் கும்பல் ஒன்றால் கத்தியால் குத்தி கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. கேரி சம்பவ இடத்திலேயே இறந்ததாக காவல்துறை அறிக்கை தெரிவித்துள்ளது. இந்த வழக்கில் சந்தேகத்தின் பேரில் அமர்தீப் சிங் என்ற 27 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமர்தீப்பைத் தவிர, கேரியைக் கத்தியால் குத்தியதற்காக மற்ற சிலரும் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 29 வயதுடைய ஒரு இளைஞர், 29, 30 மற்றும் 54 வயதுடைய மூன்று பெண்களும் உள்ளனர். கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

### உலக நாடுகளுக்கு 41 சதவீதம் வரை வரி விதிப்பு:

# உத்தரவில் கையெழுத்திட்ட ட்ரம்ப்

**நியூயார்க், ஆக. 02-**


உலக நாடுகளை விட சிரியாவில் அளவுக்கு அதிகமான வரி விதிப்பு அமெரிக்கா அரசு அறிவித்தள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் மீது புதிய வரிகள் தொடர்பான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார். பல நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதம் முதல் 41 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி, இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25சதவீதம், தைவானில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 20சதவீதம் மற்றும் தென்னாப்பிரிக்காவிலிருந்து வரும் பொருட்களுக்கு 30சதவீதம் ஆகியவை அடங்கும். இது தவிர, சிரியா மீது இதுவரை இல்லாத அளவுக்கு 41சதவீதம் வரியை விதிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லாவோஸ் மற்றும் மியான்மர் மீது 40 சதவீதமும், சுவிட்சர்லாந்து மீது 39 சதவீதமும், செர்பியா மற்றும் ஈராக் மீது 35 சதவீதமும், அல்ஜீரியா மற்றும் லிபியா மீது 30 சதவீதமும் வரி விதிக்கப்பட்டுள்ளது. இது தவிர, கனடா மீது முன்னர் 25 சதவீதமாக விதிக்கப்பட்ட வரியும் 35 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வரிகள் அடுத்த ஒரு வாரத்திற்குள் செயல்படுத்தப்படும் என்று ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**02-08-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** இனிமையாகப் பேசி எல்லோரிடமும் காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தினர் ஒற்றுமையுடன் சுப காரியங்களில் ஈடுபட்டு மகிழ்வர். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**ரிஷபம்:-** இன்று தனவரவு அதிகரிக்கும். உங்கள் மனதில் இனிய பயணங்களால் சந்தோஷம் நிலவும். அலுவலகத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் ஏற்படும்.

மிதுனம் – கல்வியில் உங்கள் திறமைகளை காட்டினாலும் தடைகள் ஏற்படும். அனைவராலும் மதிக்கப்படுவீர்கள். இனிய பேச்சுக்களால் பெண்கள் மூலம் லாபம் அடைவீர்கள்.

**கடகம்:-** சுகக் குறைவு, பெண்களால் பேரிழப்பு ஏற்படும். தாயின் உடல் நிலையில் அக்கறை தேவை. பெரியோரையும், அதிகாரிகளையும் மதித்து நடப்பது நல்லது.

**சிம்மம்:-** நம்பத் தகுந்த அநேக நண்பர்கள் நடப்புக் கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுச் சேவை மூலம் லாபம் அடைவீர்கள். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**கன்னி:-** நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும். இடைவிடாத பணியின் காரணமாக உடல் சோர்வு ஏற்படும். மனைவி, மக்களுக்கு மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**துலாம்:-** தொழில் மாற்றங்கள் ஏற்படலாம். பொதுச் சேவை ஈடுபாடு ஏற்படும். பெரியவர்களை மதித்து நடப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** பணியின் காரணமாக வேளாவேளைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**தனுசு:-** குழந்தைகளின் முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சி அளிக்கும். அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படலாம்.

**மகரம்:-** அரசு ஆதரவும் முக்கியஸ்தர்களின் உதவியும் கிடைக்கும். பொதுச் சேவையில் நாட்டம் செல்லும். மனைவி, மாற்றங்களையும், பயணங்களையும் விரும்புவார்.

**கும்பம்:-** கோவில் குளம் பணிகளில் ஆர்வம் அதிகரிக்கும். குழந்தைகளின் மகிழ்ச்சியால் மனம் மகிழும். மனதிற்கு இனிய அழகிய மனைவி அமைவாள். நல்ல ஆலோசகராக விளங்குவீர்கள்.

**மீனம்:-** பணி மாற்றங்கள் ஏற்படலாம். தாயுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு கெடுபிடி இருக்கும். சிலருக்குப் பண இழப்புக்களும் ஏற்படலாம்.

# கவின் குடும்பத்திற்கு ரூ.6 லட்சம் நிவாரணம்

### மாநில எஸ்.சி, எஸ்.டி ஆணையம் அறிவிப்பு

**தூத்துக்குடி, ஆக. 02-**

கவின் குடும்பத்திற்கு ரூ.6 லட்சத்திற்கான நிவாரண உதவியை மாநில எஸ்.சி., எஸ்.டி. அணையம் அறிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலத்தை சேர்ந்தவர் சந்திரசேகர். இவரது மனைவி தமிழ்செல்வி. ஆசிரியை. இவர்களது மகன் கவின் செல்வ கணேஷ் (வயது 27). இவர் சென்னையில் ஐ.டி.ஊழியராக பணியாற்றி வந்தார். கடந்த 27-ந்தேதி தனது தாத்தாவை பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் பகுதியில் உள்ள சித்த மருத்துவமனைக்கு அழைத்து வந்த போது அதே பகுதியை சேர்ந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தம்பதியான சரவணன்-கிருஷ்ண குமாரி ஆகியோரின் மகன் சுர்ஜித் (24) என்பவரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக பாளையங்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் காசி பாண்டியன் வழக்குப்பதிவு செய்தார். உதவி கமிஷனர் சுரேஷ் விசாரணை நடத்தியதில் தனது சகோதரி சுபாஷினியுடனான காதலை கைவிட வலியுறுத்தி அதனை கேட்காத காரணத்தினால் கவினை சுர்ஜித் கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர். இந்நிலையில், ஆணவக் கொலை செய்யப்பட்ட கவின் குடும்பத்திற்கு மாநில எஸ்.சி, எஸ்.டி ஆணையம் சார்பில் முதல் கட்ட இழப்பீடுத் தொகையாக ரூ.6 லட்சம் ஆணையத் தலைவர் தமிழ்வாணன் வழங்கினார்.

### 10 ஆண்டுகளில் இது முதல்முறை:

# மெட்ரோ ரயிலில் ஜூலை மாதம் மட்டும் 1.03 கோடி பேர் பயணம்

**சென்னை, ஆக. 02-**

ஜூன் மாதத்தை விட ஜூலை மாதத்தில் 11 லட்சத்து 58 ஆயிரத்து 910 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் அதிகம் பயணித்துள்ளனர்.

மெட்ரோ ரெயில் சேவை தொடங்கியதில் இருந்து இதுநாள் வரையிலான எண்ணிக்கையில் இதுவே அதிக எண்ணிக்கை ஆகும். சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-



சென்னை மெட்ரோ ரெயில் சேவை தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில், 2025-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் 1 கோடியே 3 லட்சத்து 78 ஆயிரத்து 835 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளனர். ஜூன் மாதத்தை விட ஜூலை மாதத்தில் 11 லட்சத்து 58 ஆயிரத்து 910 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் அதிகம் பயணித்துள்ளனர். இந்த பயணிகளின் எண்ணிக்கை மெட்ரோ ரெயில் சேவை தொடங்கியதில் இருந்து இதுநாள் வரையிலான எண்ணிக்கையில் இதுவே அதிக எண்ணிக்கை ஆகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டமன்றத்தில் விளையாடிய அமைச்சரின் 'இலகா' மாற்றம்

### மகாராஷ்டிரா மாநிலத்தில்

**மகராஷ்டிரா, ஆக. 02-**

மகாராஷ்டிரா சட்டமன்ற கூட்டத்தின்போது தேசியவாத காங்கிரஸ் அஜித் பவார்-ஐ சேர்ந்த வேளாண் அமைச்சர் மாணிக்ராவ் கோகடே செல்போனில் ரம்மி விளையாடிய வீடியோ சர்ச்சயை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இதற்கு தண்டனையாக அவரிடம் இருந்து வேளாண் துறை பறிக்கப்பட்டு, அவருக்கு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சகப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. வேளாண் அமைச்சகத்தை இப்போது தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார்) கட்சியின் தத்தா பர்னே கையாள்வார். முன்னதாக, அவர் விளையாட்டு அமைச்சகத்தை கையாண்டு வந்தார். மாணிக்ராவ் கோகட்டேவின் ராஜினாமா குறித்து பேச்சு எழுந்தது. இருப்பினும் துணை முதல்வர் அஜித் பவார் மற்றும் முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் இடையேயான சந்திப்பிற்குப் பிறகு, கோகட்டேவின் துறையை மாற்ற முடிவு செய்யப்பட்டது. வேளாண் அமைச்சராக இருந்த காலத்தில், விவசாயிகள் தங்கள் மானியங்களை தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என சர்ச்சைக்குரிய வகையில் பல கருத்துக்களை மாணிக்ராவ் கோகட்டே பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை குறைப்பு

**சென்னை, ஆக. 02-**

வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டரின் விலை குறைந்தது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்களை கருத்தில் கொண்டு எண்ணெய் நிறுவனங்களே சிலிண்டர் விலையை தீர்மானித்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனையடுத்து இந்நிறுவனங்கள் சிலிண்டர் விலையை தீர்மானிக்கின்றன. அந்த வகையில், ஆகஸ்ட் மாதத்திற்கான வணிக சிலிண்டரின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்களின் விலை 34 ரூபாய் 50 காசுகள் குறைந்து ரூ.1,789-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் ரூ.1,823.50-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது. வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் எந்த மாற்றமுமின்றி ரூ.868.50-க்கு விற்பனையாகிறது.

# வங்கதேச மாடல் அழகி கைது

**கொல்கத்தா, ஆக. 02-**

கொல்கத்தாவில் வங்கதேச மாடல் அழகி கைது செய்யப்பட்டார்.

மேற்கு வங்காள மாநிலம் கொல்கத்தாவில் வங்கதேசத்தை சேர்ந்த ஏராளமானோர் உரிய அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக தங்கியிருப்பதாக தொடர்ந்து சர்ச்சை நிலவுகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் கொல்கத்தா போலீசார் நடத்திய அதிரடி சோதனையில் வங்கதேச மாடல் அழகி சாந்தாபால் கைது செய்யப்பட்டார்.

அவர் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொல்கத்தாவில் தங்கியிருந்தது தெரியவந்தது. அவரிடம் இருந்து போலியாக தயாரிக்கப்பட்ட 2 ஆதார் அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ரேசன் கார்டு பறிமுதல் செய்யப்பட்டன. கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை 8-ந்தேதி வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.




**சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் சென்னை, பெரும்பாக்கத்தில் 6.94 கோடி ரூபாய் செலவில் அழகுப்படுத்தப்பட்ட பூங்கா மற்றும் வில்லிவாக்கம், பாடி, வடபழனி ஆகிய இடங்களில் 11.50 கோடி ரூபாய் செலவில் மேம்பாலங்களின் கீழ் அழகுபடுத்தும் பணிகள் ஆகிய 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்து, 91.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13 முதல்வர் படைப்பகங்கள் உள்ளிட்ட 26 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர், முதன்மை செயலாளர் பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

### டிரம்ப் வரி விதிப்பு விவகாரம்:
# யு.ஏ.இ., அதிபருடன் பிரதமர் மோடி பேச்சு

**புதுடில்லி, ஆக.02-**

டிரம்ப் வரி விதிப்பு விவகாரம் குறித்து ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் உடன் பிரதமர் மோடி போனில் ஆலோசனை நடத்தினார்.

ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்கி வருகிறது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கும் டிரம்ப், அந்த வர்த்தகத்தை கைவிடுமாறு, நேரடியாகவும், மறைமுகமாகவும் பல முறை எச்சரிக்கை விடுத்தார்.அதற்கு இந்திய அரசு செவி சாய்க்காத நிலையில், இப்போது இந்திய இறக்குமதி பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் அறிவித்துள்ளார். இந்த விவகாரத்தை சமாளிப்பது குறித்து மத்திய அரசு, தொழில் வர்த்தகத் துறையினருடன் ஆலோசனை நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகம் எனப்படும் யு.ஏ.இ., நாட்டின் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுடன் பிரதமர் மோடி போனில் பேசினார். இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தி உள்ளனர்.

அப்போது இந்தியாவின் நீண்ட கால பிரதமராக 2வது இடத்தில் இருக்கும் மோடிக்கு, ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் வாழ்த்து தெரிவித்துள்ளார். உலக நாடுகளுக்கு வரி விதித்து வரும் டிரம்ப் நடவடிக்கை, அதனால் ஏற்படும் சாதக பாதகங்கள், அதை சமாளிக்க என்ன செய்வது என்று இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

பாகிஸ்தானில் மிகப்பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறி உள்ள நிலையில் யு.ஏ.இ. அதிபருடன் பிரதமர் மோடி பேச்சு நடத்தியது குறிப்பிடத்தக்கது. யு.ஏ.இ., மட்டுமின்றி, சவுதி அரேபியா, கத்தார் உள்ளிட்ட அனைத்து வளைகுடா நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் மோடி, நெருக்கமான தொடர்புகளை பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### ஓட்டுகளை திருடுகிறது:
# தேர்தல் ஆணையம் மீது ராகுல் மீண்டும் குற்றச்சாட்டு

**புதுடில்லி, ஆக.02-**

ஓட்டுகளை தேர்தல் ஆணையம் திருடுகிறது என்பதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் கூறி உள்ளார்.

பார்லி வளாகத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது; ஓட்டுகள் திருடப்படுகிறது என்பதை நாங்கள் பலமுறை கூறி வருகிறோம். இதற்கு வெளிப்படையான சான்றுகள் எங்களிடம் உள்ளன. 100 சதவீதம் ஆதாரத்துடன் நான் இதைச் சொல்கிறேன். மத்தியப் பிரதேச தேர்தல் முடிவுகளுக்கு பிறகு எங்களுக்கு சந்தேகங்கள் இருந்தன. மஹாராஷ்டிரா சட்டசபை தேர்தலுக்கு பின்னர், எங்கள் சந்தேகங்கள் அதிகமாகின. குறிப்பாக 1கோடி பேர் புதிய வாக்காளர்களாக திடீரென சேர்க்கப்பட்டதை கண்டு, நாங்களே ஆறு மாதம் விசாரணையை தொடங்கினோம். அவர்கள் (தேர்தல் ஆணையம்) ஒய்வு பெற்றாலும் கூட தப்பிக்க விடமாட்டோம். முக்கியமாக தேர்தல் ஆணையத்தில் யார் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தாலும், அவர்களை கண்டுபிடிப்போம்.

# கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை: வைகோ திட்டவட்டம்

**சென்னை, ஆக.02-**

"2026 தேர்தலில் தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை'' என வைகோ தெரிவித்துள்ளார்.

2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பிரேமலதா விஜயகாந்த், ஓ.பி.எஸ். மற்றும் வைகோ என வரிசையாக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலினை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் அவரின் மகன் துரை வைகோ ஆகியோர் சந்தித்துள்ளனர். முதல்வர் ஸ்டாலின் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்திருக்கும் நிலையில், முதல்வர் ஸ்டாலினை சந்தித்து நலம் விசாரிக்க அவரின் வீட்டிற்கு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது, முதல்வரின் உடல்நலம் குறித்து வைகோ விசாரித்தார் என சொல்லப்படுகிறது.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: மு.க.முத்து மறைவு குறித்து துக்கம் விசாரித்தேன். அதோடு, முதல்வர் ஸ்டாலினின் உடல்நலம் குறித்தும் விசாரித்தேன். அவர் மருத்துவமனையிலும் மக்கள் பணி தான் செய்து கொண்டிருந்தார். கவின் படுகொலையில் அரசு எடுத்த நடவடிக்கையை வரவேற்கிறேன். காவல்துறை என்ன தான் உடனுக்குடன் கைது நடவடிக்கை எடுத்தாலும், ஆணவக்கொலைகளை தடுக்க கடும் சட்டம் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. இது குறித்து முதல்வரிடம் வலியுறுத்தினேன். 2026 தேர்தலில் தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் தேர்வு விவகாரம்: இ.பி.எஸ். மனு தள்ளுபடி

**சென்னை, ஆக.02-**

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நிராகரிக்கக் கோரி, எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2022-ம் ஆண்டு ஜூலை 11-ம் தேதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டதை எதிர்த்தும், பொதுக்குழு தீர்மானங்களை எதிர்த்தும் திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அவர் தன்னை அ.தி.மு.க. உறுப்பினர் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கை நிராகரிக்க கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், சூரியமூர்த்தி, அ.தி.மு.க. உறுப்பினரே அல்ல எனவும், உறுப்பினராக இல்லாத சூரியமூர்த்தி, கட்சி செயல்பாடு குறித்தும் கேள்வி எழுப்ப முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நான்காவது உதவி உரிமையியல் நீதிமன்ற நீதிபதி சிவசக்திவேல் கண்ணன், கட்சி விதிப்படி பொதுச் செயலாளர், கட்சியின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட வேண்டும். இந்த விதிகளின்படி பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என தெரிவிக்கவில்லை என்பதால், இந்த வழக்கு விசாரணைக்குரியது எனக் கூறி, சூரியமூர்த்தியின் வழக்கை நிராகரிக்கக் கோரி எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

### பீகார் வரைவு வாக்காளர் பட்டியல்:
# மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை இல்லாததால் அரசியல் கட்சிகள் அதிர்ச்சி

**புதுடெல்லி, ஆக.02-**

பீகார் மாநில வரைவு வாக்காளர் பட்டியலை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. வரைவு வாக்காளர் பட்டியலில் மொத்தம் எவ்வளவு வாக்காளர்கள் உள்ளனர் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், வாக்காளர்கள் தங்கள் பெயர்களைச் சரிபார்க்கலாம். பெயர் விடுபட்டிருந்தால் வாக்காளர்கள் தங்கள் பெயர்களைச் சேர்க்க கோரிக்கை விடுக்கலாம். வரைவு வாக்காளர் பட்டியல், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் என தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

வாக்காளரோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளோ செப்டம்பர் 1-ம் தேதி வரை இத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து தீர்வைப் பெறலாம்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாக கடந்த ஜூன் மாதம் பீகாரில் வாக்காளர்களின் எண்ணிக்கை 7.93 கோடியாக இருந்தது. வரைவு வாக்காளர் பட்டியலில் மொத்தம் எவ்வளவு வாக்காளர்கள் உள்ளனர் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

முன்னதாக, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்வர் வெளியிட்ட அறிக்கையில், "பீகார் வரைவு வாக்காளர் பட்டியல்கள், மாநிலத்தின் 38 மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் பீகாரில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் காகித வடிவிலும், டிஜிட்டல் வடிவிலும் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

# பாலியல் வன்கொடுமை வழக்கில் தேவகவுடா பேரன் குற்றவாளி
## சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு

**பெங்களூரு, ஆக.02-**



வீட்டுப் பணிப் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் மதச்சார்பற்ற ஜனதா தள கட்சியின் முன்னாள் எம்.பி பிரஜ்வல் ரேவண்ணா குற்றவாளி என சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரனும் கர்நாடகாவின் ஹசன் தொகுதியின் முன்னாள் எம்பியுமான பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு எதிராக மூன்று பாலியல் வன்கொடுமை வழக்குகள், ஒரு பாலியல் துன்புறுத்தல் வழக்கு என 4 வழக்குகள் உள்ளன. எம்.பி மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளுக்கான சிறப்பு அமர்வு நீதிமன்றம் ரேவண்ணாவின் வழக்குகளை விசாரித்து வருகிறது.

இதில், ரேவண்ணாவின் குடும்பத்துக்குச் சொந்தமான பண்ணை வீட்டில் உதவியாளராக இருந்த 48 வயது பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கு விசாரணை கடந்த மே 2-ம் தேதி தொடங்கியது.

நீதிபதி சந்தோஷ் கஜனன் பட் வழக்கை விசாரித்து வந்தார். மூத்த வழக்கறிஞர்கள் அசோக் நாயக் மற்றும் பி. என். ஜெகதீஷா ஆகியோர் அரசுத் தரப்பு சிறப்பு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த வழக்கின் விசாரணை தினசரி நடைபெற்று வந்த நிலையில், இரு தரப்பு வாதங்கள் நிறைவடைந்து, பிரஜ்வல் ரேவண்ணா பாலியல் வன்கொடுமை குற்றவாளி என நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. தண்டனை குறித்த வாதங்கள் நடைபெற்று வரும் நிலையில், தண்டனை விவரம் இன்று (ஆகஸ்ட் 2) அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 5 நாட்களுக்கு பிறகு கவின் உடலை பெற்று கொண்ட உறவினர்கள்



**திருநெல்வேலி, ஆக.02-**

நெல்லையில் ஆணவக் கொலையான கவின் செல்வகணேஷ் உடலை ஐந்து நாட்களுக்குப் பின்னர் உறவினர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த பட்டியலின சமூக இளைஞரான மென்பொருள் பொறியாளர் கவின் செல்வகணேஷ் கடந்த 27-ம் தேதி திருநெல்வேலி கேடிசி நகரில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் இவர் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரன் சுர்ஜித் கைது செய்யப்பட்ட நிலையில், அவரது பெற்றோரான சிறப்பு காவல் படை உதவி ஆய்வாளர்கள் சரவணன், கிருஷ்ணகுமாரி ஆகிய இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணன், நெல்லை மாநகர போலீஸாரால் கைது செய்யப்பட்டார். இந்நிலையில், நெல்லையில் ஆணவக் கொலையான கவின் செல்வகணேஷ் உடல் அவரது தந்தை சந்திரசேகர், தம்பி பிரவீன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐந்து நாட்களுக்குப் பின்னர் கவினின் உடலை உறவினர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். முன்னதாக, அமைச்சர் கே.என். நேரு நெல்லை மாவட்ட கலெக்டர் சுகுமார் ஆகியோர் கவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். கவின் உடல் அவரது சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் கிராமத்துக்கு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டு இறுதி சடங்கு நடைபெற்றது.

# தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மாற்றமா? திடீரென பரவிய தகவலால் பரபரப்பு

**சென்னை, ஆக.02-**

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி மாற்றப்படுவார் என்று திடீரென பரவிய தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி மாற்றப்படுவார் என்று அடிக்கடி சமூகவலைதளங்களில் தகவல்கள் பரவுவதும் பிறகு அது வதந்தி என்று அறிவிக்கப்படுவது வழக்கமாகி விட்டது. அந்த வகையில் நேற்று முன்தினம் முதல் சமூக வலைதளங்களில் கவர்னர் ஆர்.என்.ரவி மாற்றப்படுவார் என்று புதிய தகவல் பரவி வருகிறது.

தமிழக கவர்னராக ஆர்.என்.ரவி பதவி ஏற்பதற்கு முன்பு 2 ஆண்டுகள் நாகலாந்து மாநிலத்தில் கவர்னராக இருந்தார். அங்கிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த பிறகு தொடர்ந்து 4 ஆண்டுகளாக அவர் கவர்னர் பதவியில் இருக்கிறார். வருகிற செப்டம்பர் மாதம் வந்தால் அவர் தொடர்ச்சியாக கவர்னர் பதவியில் இருப்பது 6 ஆண்டுகளை நிறைவு செய்தற்கு சமமாகும். கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் அவர் கவர்னர் பதவியில் 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார்.

இதனால்தான் அவர் எந்த நேரத்திலும் மாற்றப்படுவார் என்று அடிக்கடி தகவல் பரவுகிறது. தற்போதும் அதன் அடிப்படையில்தான் தகவல் பரவி இருப்பதாக கவர்னர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.கவர்னர் ஆர்.என்.ரவி துணை ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படலாம் என்றும் அந்த தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதனை கவர் மாளிகை அதிகாரிகள் முற்றிலுமாக மறுத்துள்ளனர். கவர்னர் ஆர்.என்.ரவி தற்போது ஆகஸ்டு 15-ம் தேதி சுதந்திர தின விழா நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தி வருவதாகவும் சுதந்திர தினத்தன்று விருந்து தொடர்பாக அவர் ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

# ஓ.பி.எஸ். கேட்டால் பிரதமரை சந்திக்க ஏற்பாடு: நயினார் நாகேந்திரன் உறுதி

**மதுரை, ஆக.02-**

ஓ.பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டால் 26-ந்தேதி தமிழகம் வரும் பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்வேன் என்று நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட பிறகு, 'அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு' என்ற அமைப்பை உருவாக்கி, தனது ஆதரவாளர்களுடன் செயல்பட்டு வருகிறார். இதற்கிடையே கடந்த 26, 27 ஆகிய தேதிகளில் தமிழகம் வந்த பிரதமர் மோடியை, நேரில் சந்திக்க ஓ.பன்னீர்செல்வம் அனுமதி கேட்டிருந்தார்.

ஆனால், அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் ஓ.பன்னீர்செல்வம் அதிருப்தி அடைந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தனது ஆதரவாளர்களுடன் ஓ.பன்னீர்செல்வம் ஆலோசனை நடத்தினார். அப்போது, 'நம்மை மதிக்காத பா.ஜ.க. கூட்டணியில் இனியும் இருக்கக்கூடாது' என்று நிர்வாகிகள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் அறிவித்தார்.

இதையடுத்து பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக அறிவித்த ஓ.பன்னீர்செல்வம், முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று 2 முறை சந்தித்து பேசினார். இது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியதாவது:- கூட்டணியில் இருந்து வெளியேறுவதற்கு முன்பு ஓ.பன்னீர்செல்வத்திடம் பல முறை பேசினேன். எந்த முடிவையும் எடுக்க வேண்டாம் என்று அவரிடம் வலியுறுத்தினேன்.

அவர் என்னிடம் கேட்டிருந்தால் பிரதமரை சந்திக்க நான் ஏற்பாடு செய்திருப்பேன். இப்போதும் ஓ.பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டால் 26-ந்தேதி தமிழகம் வரும் பிரதமரை சந்திக்க ஏற்பாடு செய்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

# சுமார் 80 மாவட்டங்களில் நாளை த.வெ.க. பூத் முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடக்கிறது

**சென்னை, ஆக.02-**

த.வெ.க. பூத் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் சுமார் 80 மாவட்டங்களில் நாளை தமிழகம் முழுவதும் நடக்கிறது

2026 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வரும் கட்சித் தலைவர் விஜய் தமிழகம் முழுவதும் சுமார் 69 ஆயிரம் பூத் முகவர்களை நியமனம் செய்துள்ளார். பூத் கமிட்டி உறுப்பினர்கள் தினந்தோறும் அந்த பகுதிகளில் வீடு வீடாக சென்று த.வெ.க. கொள்கைகள் மற்றும் வருங்கால முதல்வர் வேட்பாளர் விஜய் என்பதையும் மக்களிடையே பிரசாரம் செய்து வருகின்றனர். இது மட்டுமின்றி தொகுதியில் உள்ள மக்களின் அடிப்படை பிரச்சனைகளையும் நேரில் ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரச்சனைகளை தீர்க்க கோரி மனு செய்து வருகின்றனர். இந்நிலையில் த.வெ.க. பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை ( 3-ந்தேதி) சுமார் 80 மாவட்டங்களில் நடக்கிறது. கூட்டத்தில் பங்கேற்கும் நிர்வாகிகளுக்கு வாக்குச்சாவடியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், வாக்காளர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது உள்பட 2026 தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் பற்றி தீவிரமாக ஆலோசனை நடைபெற இருக்கிறது. பூத் முகவர்களாக அந்தந்த பகுதியில் இருப்பவர்களே நியமனம் செய்யப்பட்டுள்ளதால் ஒரு வீடு விடாமல் இரவு-பகல் பாராமல் த.வெ.க.வினர் பணியாற்றி வருகின்றனர். கூட்ட ஏற்பாடுகளை கட்சித் தலைவர் விஜய் உத்தரவின்படி, பொதுச்செயலாளர் என்.ஆனந்த் அறிவுறுத்தலின்படி 234 தொகுதிகளிலும் தீவிரமாக செய்து வருகின்றனர்.

# முதல்வரை சந்திக்க நேரம் கேட்கவில்லை: ராமதாஸ்

**சென்னை, ஆக.02-**

முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திக்க நேரம் கேட்கவில்லை என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார். முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஏற்பட்ட லேசான தலை சுற்றலை தொடர்ந்து சில நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல்நிலை குறித்து பலரும் விசாரித்தனர். இதனிடையே, அரசு பணிகளை தொடர்ந்து கவனித்து வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 27-ந்தேதி மாலை வீடு திரும்பினார். இதையடுத்து வீட்டில் ஓய்வில் இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் தலைமை செயலகத்திற்கு வந்து பணிகளை தொடர்ந்து வருகிறார்.

இதனிடையே, மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முன்தினம் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், பிரேமலதா ஆகியோர் சந்தித்து பேசியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனை தொடர்ந்து, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசும், முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திக்க உள்ளதாக தகவல் வெளியானது. இது தொடர்பாக ராமதாசிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திக்க நேரம் கேட்கவில்லை என்று தெரிவித்தார்.

அடுத்து நடைபெற உள்ள சட்டசபை தேர்தலை நோக்கி அரசியல் கட்சிகள் பணியாற்றி வரும் நிலையில், அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணி தலைவர்கள் எங்கள் கூட்டணியில் இன்னும் பல கட்சிகள் இணையும் என்றும் தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கு அழைப்பும் விடுத்து வருகின்றனர். இதற்கெல்லாம் பதில் அளிக்காமல் இருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூட்டணி விவகாரத்தில் சத்தமில்லாமல் வேலை பார்ப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

# 71-வது தேசிய விருதுகள் அறிவிப்பு: சிறந்த தமிழ் படமாக 'பார்க்கிங்' தேர்வு

**புதுடில்லி, ஆக.02-**

இந்தியாவின் 71-வது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதில், சிறந்த தமிழ் படத்துக்கான தேசிய விருதுக்கு பார்கிங் திரைப்படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.


கடந்தாண்டு 2022ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கப்பட்ட நிலையில், இந்தமுறை 2023ஆம் ஆண்டுக்கான படங்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. டில்லியில் உள்ள தேசிய ஊடக மையத்தில் இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த தேர்வுக்கான போட்டியில் 332 படங்கள் இடம்பெற்றன.

71-ஆவது தேசிய விருதுகள் விவரம்: தைபேயி - பய்டங் ஸ்டெப் ஆஃப் ஹோப், தெலுங்கு - பகவந்த் கேசரி, தமிழ் - பார்க்கிங்

பஞ்சாபி - கால் ஆஃப் எக்சைட்மெண்ட், ஒடிசா - புஷ்கரா, மராத்தி - ஷியாமச்சி ஆய், மலையாளம் - உள்ளொழுக்கு, கன்னடம் - கண்டீலு - தி ரே ஆஃப் ஹோப்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



முதல்வர் ஸ்டாலினை ஓ.பி.எஸ்., பிரேமலதா சந்தித்து இருப்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஓ.பி.எஸ். என்ன நோக்கத்தில் முதல்வரை சந்தித்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவர் தே.ஜ. கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டார் என்பது அவருக்கு நல்ல காலம் பிறந்து இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

**- திருமாவளவன்**




'வாக்காளர் சிறப்புத் திருத்தம்' என்ற பெயரில் வடமாநிலத்தவரை தமிழ்நாட்டு வாக்காளராக்கும் இன உரிமை பறிப்பை இந்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டுமென வலியுறுத்துகிறேன். இல்லையென்றால் தமிழர் அரசதிகார உரிமையைப் பாதுகாக்க நாம் தமிழர் கட்சி மாபெரும் மக்கள் திரள் போராட்டங்களை முன்னெடுக்கும்.

**- சீமான்**



2026 தேர்தலில் திமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கவின் படுகொலையில் அரசு எடுத்த நடவடிக்கையை வரவேற்கிறேன். காவல்துறை என்ன தான் உடனுக்குடன் கைது நடவடிக்கை எடுத்தாலும், ஆணவக்கொலைகளை தடுக்க கடும் சட்டம் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது.

**- வைகோ**



சமஸ்கிருதத்தை புரிந்து கொள்வதற்கும் அதில் உரையாடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நான் சமஸ்கிருத மொழியை கற்றுக்கொண்டேன். ஆனால், என்னால் சரளமாகப் பேச முடியவில்லை. சமஸ்கிருதம் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைய வேண்டும். சமஸ்கிருதத்தை நாட்டின் தொடர்பு மொழியாக மாற்ற வேண்டும்.

**- மோகன் பாகவத்**

# தமிழக அரசு சார்பில் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழா முன்னேற்பாடு பணிகள்

## அமைச்சர் சு.முத்துசாமி நேரில் ஆய்வு



ஈரோடு,ஆக.02-

மாவீரன் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழாவினையொட்டி, ஈரோடு மாவட்டம், அரச்சலூர் பேரூராட்சி ஓடாநிலையில் உள்ள மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவ சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளதை முன்னிட்டு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி விழா நடைபெறும் இடத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் பேரூராட்சி, ஓடாநிலை, தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு ஆடிப்பெருக்கு விழாவினையொட்டி, ஈரோடு மாவட்டம், அரச்சலூர் பேரூராட்சி ஓடாநிலையில் உள்ள மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவ சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளதை முன்னிட்டு, மணிமண்டபத்தில் விழா முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தீரன் சின்னமலை அவர்களின் நினைவு ஆடிப்பெருக்கு விழாவினை முன்னிட்டு, சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவச் சிலைக்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சார்ந்தவர்கள் மரியாதை செலுத்த உள்ளார்கள். மேலும், அரசின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

அதனை முன்னிட்டு, இன்றைய தினம் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் மணிமண்டபத்தில் விழா முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளில் ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# வளர்ச்சிப்பணிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளது: கலெக்டருக்கு, சட்டமன்ற பேரவை பொது கணக்கு குழு தலைவர் செல்வபெருந்தகை பாராட்டு



ஊட்டி, ஆ.02-

நீலகிரி மாவட்டத்தில் வளர்ச்சிப்பணிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்று கொண்டுள்ளது என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீருக்கு, சட்டமன்ற பேரவை பொது கணக்கு குழு தலைவர் செல்வபெருந்தகை பாராட்டு தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழு தலைவர் கு.செல்வபெருந்தகை (ஸ்ரீ பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி) மற்றும் குழு உறுப்பினர்கள் ப.அப்துல் சமது (மணப்பாறை சட்டமன்ற தொகுதி), சி.வி.எம்.பி. எழிலரசன் (காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி), எஸ்.சேகர் (பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி), கே.ஆர்.ஜெயராம் (சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி) ஆகியோர் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் ஊட்டியிலுள்ள தமிழகம் அரசினர் விருந்தினர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழு தலைவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டின் சட்டமியற்றும் அமைப்பான தமிழ்நாடு சட்டமன்றம் சார்பில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை திறம்பட செயல்படுத்தி வருகின்றன. பொதுக்கணக்கு குழுவானது நிர்வாகங்களில் வெளிப்படை தன்மையினை உறுதி செய்வதற்காக ஆங்கிலேயர்கள்; ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்டது. மக்களின் சார்பில் நிர்வாக கணக்குகளை பொதுக்கணக்கு குழு பராமரித்து வருகிறது. நிதியினை செலவளிப்பதற்கு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் அனுமதி அளிக்கப்படுகின்ற போது, அந்த நிதி எவ்வாறு செலவழிக்கப்படுகிறது, என்பதனை ஆய்வு செய்யும் பணியினை பொது கணக்குக் குழு மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், நிதித்துறை (கருவூலம் மற்றும் கணக்குத்துறை), உயர்கல்வித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகிய துறை அலுவலர்களிடம் தணிக்கை அறிக்கையில் கண்டுள்ள பத்திகள் தொடர்பாக விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட இருக்கிறது. ஆகவே அலுவலர்கள் சரியான தகவல்களை குழுவின் முன்பாக தெரிவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

மேலும், பல இடங்களில் ஆய்வு மேற்கொண்டதில் வளர்ச்சிப்பணிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்று கொண்டுள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட கலெக்டருக்கு எங்களது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறோம். மேலும், சில இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகளை இயக்குவது குறித்து அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது எனவும், மனநிறைவோடு இந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுகணக்கு குழு ஆய்வை முடித்து கொள்கிறது என்றார்.

இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.கணேஷ் (உதகை), பொன்.ஜெயசீலன் (கூடலூர்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா இ.கா.ப., துணை இயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்) வித்யா , மாவட்ட வன அலுவலர்கள் கௌதம், (நீலகிரி வனக்கோட்டம்), வெங்கடேஷ்பிரபு, (கூடலூர்), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷ் கௌர், மேலாண்மை இயக்குநர் (தேயிலை வாரியம்) அருண்லால், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழு இணைச்செயலாளர் ரேவதி, துணைச்செயலாளர் பாலஸ்ரீனிவாசன உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளியில் 17 மாணவ, மாணவியர்களுக்கு ஸ்வெட்டர், நோட்டுகள் மற்றும் பழ வகைகள்

## சட்டமன்ற பேரவை பொது கணக்கு குழு தலைவர் செல்வபெருந்தகை வழங்கினார்



ஊட்டி, ஆக.02-

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழு தலைவர் கு.செல்வபெருந்தகை (ஸ்ரீ பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி) மற்றும் குழு உறுப்பினர்கள் ப.அப்துல்சமது (மணப்பாறை சட்டமன்ற தொகுதி), சி.வி.எம்.பி. எழிலரசன் (காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி), எஸ்.சேகர் (பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி), கே.ஆர்.ஜெயராம் (சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி) ஆகியோர், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், நீலகிரி மாவட்டத்தில்; பல்வேறு இடங்களில் நேற்று (01.08.2025) கள ஆய்வு மேற்கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழு தலைவர்கு.செல்வபெருந்தகை (ஸ்ரீ பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி) மற்றும் குழு உறுப்பினர்கள் முதலாவதாக, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், ஊட்டியில் உள்ள செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளியை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, 17 மாணவ, மாணவியர்களுக்கு ஸ்வெட்டர், நோட்டுகள் மற்றும் பழ வகைகளை வழங்கினர்.

அதனை தொடர்ந்து, ஊட்டி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் மற்றும் அடிப்படை வசதிகளை நேரில் பார்வையிட்டு, உள்நோயாளிகளாக வருகை தந்த பொதுமக்களிடம் கலந்துரையாடி, மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர். மேலும், இக்குழுவானது, ஊட்டி அரசு மருத்துவக்கல்லூரியில் பயின்று வரும் மாணவ, மாணவியர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடி, அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

பின்னர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழுவின் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழுவானது, இன்றைய தினம் மாவட்;ட கலெக்டருடன் பல்வேறு இடங்களில் கள ஆய்வு மேற்கொண்டு வருகிறது. மதியம் ஆய்வு கூட்டம் நடைபெறவுள்ளது.

மலை மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் ஒரு முன்மாதிரியான மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் பாராட்;டத்தக்க ஒன்றாகும்.

இம்மருத்துமனை திறப்பு விழாவின் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் குடிநீர் வசதி வேண்டி மாணவ, மாணவர்கள்; கோரிக்;கை வைத்தனர்.

இக்கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.27.50 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வசதி பூர்த்தி செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நான்கு மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கல்லூரி மாணவ, மாணவிகள், உள்நோயாளிகள், வெளிப்புற நோயாளிகள் உள்ளிட்ட அனைவரும் பயனடைவார்கள்.

மேலும், இக்கல்லூரி மாணவ, மாணவிகள் பாராமெடிக்கல் வகுப்பு மற்றும் செவிலியர் வகுப்பு, விளையாட்டு திடல் ஆகியவை குறித்து கோரிக்கை வைத்துள்ளனர். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழுவானது விளையாட்டு திடல் அமைத்து தரக் கோரி அரசுக்கு பரிந்துரை செய்ய உள்ளது.

அதேபோல் இன்று காலை உதகை செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளியை இக்குழுவானது நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதில், மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். ஏனென்றால் தனியார் பள்ளியில் உள்ளது போன்று அனைத்து வசதிகளும் இப்பள்ளியில் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இப்பள்ளியில், மாணவ, மாணவியர்களின் சேர்க்கை அதிகரிக்க சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இப்பள்ளியை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட கலெக்டர் மிக சிறப்பான முறையில் கண்காணித்து வழிநடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழு தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வன அலுவலர் கௌதம் . (நீலகிரி வனக்கோட்டம்), ஊட்டி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2024-2026 ஆம் ஆண்டிற்கான பொது கணக்கு குழு இணைச்செயலாளர் ரேவதி, துணைச்செயலாளர் பாலஸ்ரீனிவாசன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளர் (பொ) செல்வகுமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ், அரசு மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் மரு.ஜெயலலிதா, ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், நகராட்சி ஆணையாளர் வினோத் (பொ), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குப்புராஜ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர் சங்கீதா, உதகை நகர் நல அலுவலர் மரு.சிபி, வட்டாட்சியர் சங்கர்கணேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



கலெக்டர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், லக்காபுரம் அமுதம் மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கோரிக்கை மனு அளித்த மனுதாரரின் கோரிக்கை மனுவின்மீது உடனடி தீர்வாக அரசு நலத்திட்ட உதவியினை வழங்கினார். உடன் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர். வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் வடுகப்பட்டி பேரூராட்சியில் நேற்று உங்களுடன் ஸ்டாலின் மனுக்கள் பெறும் முகாம் தலைவர் அம்பிகாபதி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது இதில் தெற்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார் தாசில்தார் சிவசங்கர் துணைத் தலைவர் குழந்தைசாமி செயல் அலுவலர் நந்தகுமார் மற்றும் கவுன்சிலர்கள் விசுவநாதன் பத்மாவதி செந்தில் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க

# ஈரோடு பவானிசாகர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர்: அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தனர்



ஈரோடு,ஆக.02-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார்கள்.

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்தார்கள். வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து 2025-2026-ஆம் ஆண்டு, முதல் போக பாசனத்திற்கு, கீழ்பவானித் திட்டப் பிரதானக் கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாக 1,03,500 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 31.07.2025 முதல் 14.08.2025 முடிய நாளொன்றுக்கு 2300 கனஅடி/ விநாடி வீதம் 15 நாட்கள் சிறப்பு நனைப்பிற்கு 2980.80 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் 15.08.2025 முதல் 12.12.2025 முடிய 120 நாட்களுக்கு, முதல்போக நன்செய் பாசனத்திற்கு 23846.40 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 135 நாட்களுக்கு 26827.20 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், ஈரோடு மாவட்டத்திலுள்ள ஈரோடு, கோபி, பவானி, பெருந்துறை, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி ஆகிய வட்டங்களிலுள்ள நிலங்களும், திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் வட்டத்திலுள்ள நிலங்களும் மற்றும் கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி வட்டத்திலுள்ள நிலங்களும் என ஈரோடு மாவட்டத்தில் 91,280 ஏக்கர், திருப்பூர் மாவட்டத்தில் 10,330 ஏக்கர் மற்றும் கரூர் மாவட்டத்தில் 1,03,500 ஏக்கர் என மொத்தம் 1,03,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அணையில் 100.06 அடி அளவு நீர் உள்ளது. நீர் இருப்பு 28.77 டி.எம்.சி. ஆறுகளில் 3000 கன அடி நீரும், கீழ்பவானித்திட்ட கால்வாயில் விநாடிக்கு 5 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மேலும் பவானிசாகர் அணையிலிருந்து நடைமுறையின்படி ஆகஸ்ட் 15 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படும். தற்போது தண்ணீர்வரத்து அதிகமாக உள்ளதால் தமிழ்நாடு முதலமைச்சர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதற்கு ஏதுவாக முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். அந்தவகையில் இந்த வாய்க்காலின் தூரம் 124 மைல்கல் ஆகும். துறை சார்பில் மிக பெரிய முயற்சிகள் மேற்கொண்டு தற்போது 74 மைல்கல்லிற்கு தூர்வாரும் பணிகள் முடித்துள்ளார்கள். இன்றையதினம் திறந்து விடப்பட்ட தண்ணீர் 74 மைல் கல் அடைவதற்கு நான்கு அல்லது ஐந்து நாட்கள் ஆகும்.

மேலும் 50 மைல்கல் பணிகள் மூன்று நாட்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி நல்ல மகசூலை பெற வேண்டும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின் போது, கலெக்டர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), சி.சரஸ்வதி (மொடக்குறிச்சி), ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், கண்காணிப்பு பொறியாளர் கோபி (பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை), செயற்பொறியாளர்கள் திருமூர்த்தி, (கீழ்பவானி வடிநிலக் கோட்டம்), உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு கள்ளுக்கடைமேடுஅருள்மிகு ஸ்ரீ குண்டத்து பத்திரகாளி அம்மன் ஆடி மாத மூன்றாம் வெள்ளிக்கிழமை காய்கறி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்த போது எடுத்த படம்

# பொது நூலகத்துறை மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தும் 21வது ஈரோடு புத்தகத் திருவிழா

## அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்து அரங்குகளை பார்வையிட்டார்



**ஈரோடு,ஆக.02-**
ஈரோடு மாவட்டத்தில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பொது நூலகத்துறை மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தும் 21 - வது ஈரோடு புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து அரங்குகளை பார்வையிட்டார்.

ஈரோடு மாவட்டம், சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பொது நூலகத்துறை மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தும் 21 - வது ஈரோடு புத்தகத் திருவிழா - 2025 ஐ தொடங்கி வைத்து, அரங்குகளை பார்வையிட்டார். வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தாவது.

இன்றைய தினம் மாவட்ட நிர்வாகம் சார்பில் பொது நூலகத்துறை மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தும் 21 - வது ஈரோடு புத்தகத் திருவிழா - 2025 ஐ தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 21- வது ஈரோடு புத்தகத் திருவிழா - 2025 ஆகஸ்ட் 01 முதல் 12 வரை 12 நாட்கள் நடைபெற உள்ளது. இப்புத்தக கண்காட்சியில் சுமார் 230 அரங்குகள் அமைக்கப்பட உள்ளது. சென்னைக்கு அடுத்தப்படியாக ஈரோட்டில் தான் மிகப்பெரிய அளவிலே புத்தகத்திருவிழா நடைபெற்று வருகிறது. இந்த புத்தகத் திருவிழா நடைபெற ஈரோடு கலெக்டர் மாணவ, மாணவியர்களிடம் சிறந்த முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி, பல்வேறு அலுவலர்களுடன் கலந்தாலோசித்து சிறப்பான முறையில் நடத்திடும் வகையில் ஏற்பாடு செய்திருக்கிறார். இத்தகைய ஏற்பாட்டினை செய்து கொடுத்த ஈரோடு கலெக்டர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தகத்திருவிழாவில், ''மண்ணுயிர் நுண்ணுயிர் உன்உயிர்'', ''எனைத்தானும் நல்லவை கேட்க'', மக்கள் சிந்தனையில் நல்ல மாற்றத்தைப் பெரிதும் தருவது பேச்சா? எழுத்தா? பாட்டா? திரையா ?, ''ஊருக்கு நல்லது சொல்வேன்'' ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவர்'', ''அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு விருது'' வழங்கும் நிகழ்வு கருத்துரை, ''நெய்த நூலும் நெய்யாத நூலும்'', ''இலக்கியத்தில் உயிர் நேயம்'', ''புதுக்கருத்தும் பொதுக்கருத்தும்'' ''தமிழருக்கில்லை - தமிழ்'', ''அறிவை விரிவு செய்'', ''குழந்தைகளோடு கதையாடு...'', படைப்பாளிகளைப் போற்றுவோம், ''சங்கத் தமிழின் தொன்மை'', ''எண்ணம் போல் வாழ்க்கை'', ''நாடகம் வளர்த்த தேசியம்'', ''தென்றலிலே புறப்பட்ட தீப்பிழம்பு'' உள்ளிட்ட தலைப்புகளில் 01.08.2025 முதல் 12.08.2025 வரை நாள்தோறும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு மற்றும் பிற மாநிலத்தில் உள்ள அனைத்துத் தலைசிறந்த தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகப் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

மேலும், புத்தக கண்காட்சிக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் வருகை புரிவதற்காக பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் சிறப்பு ஏற்பாடுகளும் மற்றும் பொதுமக்கள் வருவதற்காக, போக்குவரத்து வசதி மற்றும் காவல்துறை மூலம் பாதுகாப்பு வசதி மற்றும் மருத்துவ வசதி ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த புத்தக திருவிழா ஆண்டிற்கு ஒருமுறைதான் நடத்தப்படுகிறது. எனவே இப்புத்தக கண்காட்சியை பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசுப்போட்டித்தேர்வுகளுக்கு பயிலும் மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் என அனைவரும் பயன்படுத்தி கொண்டு பயன்பெற வேண்டும்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர் ஈரோடு மாவட்டத்திற்கு எண்ணற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை அறிவித்து சிறப்பாக அதனை செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கல்வியறிவில் சிறந்து விளங்க பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் ஈரோடு, பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில், தலைவர்களின் சிலைகள் அமைக்கப்பட்டு இடத்தில் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் நூலகம் அமைக்கவும், முனிசிபல் காலனி மற்றும் ஈரோடு மாவட்டம் கள்ளிப்பட்டி பகுதியில் டாக்டர்.கலைஞர் அவர்களின் சிலை அமைக்கப்பட்டுள்ள இடங்களிலும் நூலகங்கள் அமைக்க உத்தரவிட்டார். அதன்படி, அமைக்கப்பட்டுள்ள நூலகங்களில் மாணவ, மாணவியர்கள் படித்து பயன் பெற்று வருகின்றனர். மேலும் பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தில் படித்து 12-க்கும் மேற்பட்டோர் போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற்று பயனடைந்துள்ளனர். அவ்வாறு பயன்பெற்ற மாணவர்கள் வெற்றி பெற வழிவகை செய்து தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இவ்விழாவில், ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கோ.சுப்பாராவ், மாவட்ட நூலக அலுவலர் சு.சாமிநாதன், தலைவர் (மக்கள் சிந்தனைப் பேரவை) ஸ்டாலின் குணசேகரன், தலைவர் (பப்பாஸி) சேது சொக்கலிங்கம், படைப்பாளர்கள், வாசகர்கள், பதிப்பகத்தினர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.


# சதுர்த்தியையொட்டி ஈரோட்டில் விற்பனைக்கு தயாராகும் விநாயகர் சிலைகள்



**ஈரோடு, ஆக 2-**
இந்துக்கள் மிகவும் சிறப்பாக கொண்டாடும் பண்டிகளில் ஒன்றான விநாயகர் சதுர்த்தி இந்த மாதம்.. 27ல் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி களிமண், கிழங்கு மாவு உள்ளிட்டவற்றால் விநாயகர் சிலைகள் தயா ரிக்கும் பணி ஈரோடு நசியனூர் அருகில் நடந்து வருகிறது.ஈரோடு, ஸ்ரீ சித்தி விநா யகர் சிற்ப கலை கூடத்தை சேர்ந்த எம் சி வெங்கடாசலம் கூறியதாவது:

கடலை மாவு, ஸ்டார்ச் மாவு, குச்சி கிழங்கு மாவில் விநாயகர் சிலைகளை அரை அடி முதல், 10 அடி உயரம் வரை செய்கிறோம். நீரில் எளிதில் கரையும் சுற்றுச் குழலுக்கு பாதிப்பு ஏற்படாத, ரசாயனம் கலக்காத வண்ணங் களை விநாயகர் சிலைக்கு பயன்படுத்துகிறோம். 10 பேர் விநாயகர் சிலை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். விநாயகர் சிலைகள், ரூ.100 முதல், 18 ஆயிரம் வளர விற்கப்படுகிறது. ஆர்டரின் பேரில் பெரிய சைஸ் விநாயகர் சிலைகள் செய்கிறோம். 10. 6, 3 அடிகளில் சிலைகள் தயாராக விற்பனைக்கு உள்ளன. 2,5 மற்றும் அரை அடி விநாயகர் சிலைகள் ஏராளமாக உள்ளன. 10 அடி விநாயகர் சிலை செய்ய, 20 கிலோ ஸ்டார்ச். 20 கிலோ குச்சி கிழங்கு மாவு தேவைப்படும். மேலும் இம்முறை முருகனுடன் விநாயகர் சாரட் வண்டியில் விநாயகர் சிங்கத்துடன் விநாயகர் புள்ளி மான் உடன் விநாயகர் உட்பட விநாயகர் சிலை விற்பனை க்கு உள்ளது என்றார்.

# ஆடி 3-வது வெள்ளி: ஊட்டி மாரியம்மன் கோவிலில் திரளான பக்தர்கள் சாமி தரிசனம்



ஊட்டி, ஆக.2-
ஆடி வெள்ளியையொட்டி ஊட்டி மாரியம்மன் வளையல் அலங்காரத்தில் அருள்பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

பெண் சக்திக்கு பெருமை சேர்க்கும் மாதம் என்றழைக்கப்படுவது ஆடி மாதம் ஆகும். ஆடி மாதம் அம்மனுக்கு உகந்த மாதம் என்பதால் இந்த மாதம் முழுவதும் பல அவதாரங்களில் அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் மற்றும் பூஜைகள் நடத்தப்படும்.

ஆடி மாதத்தில் மற்ற விழாக்களை விட ஆடிவெள்ளி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

இந்த ஆண்டுக்கான ஆடி மாதம் கடந்த 18-ந் தேதி தொடங்கியது. மூன்றாவது ஆடி வெள்ளியான நேற்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள அம்மன் கோவில்களில் ஆடி வெள்ளி பூஜைகள் சிறப்பாக நடந்தன.மாரியம்மன் காளியம்மனும் ஒரே இடத்தில் வீற்றிருக்கும் பெருமை வாய்ந்த ஊட்டி மாரியம்மன் கோவிலில் நேற்று ஆடி வெள்ளியை ஒட்டி சிறப்பு பூஜை நடந்தது. அப்போது ஊட்டி மாரியம்மன் வளையல் அலங்காரத்தில் அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து பிரசாதம் பெற்றனர். நிறைய பெண்கள் கூழ்; காய்ச்சிவந்து அம்மனுக்கு படையலிட்டு பக்தர்களுக்கு வழங்கினர்.ஊட்டி மஞ்சூர் பஜாரில் உள்ள மாரியம்மன் கோவிலில் நேற்று காலை முதல் பெண்கள் குடும்பத்துடன் வந்து சாமி தரிசனம் செய்து பிரார்த்தனை செய்தனர். கோவிலுக்கு வந்த பக்தர்களுக்கு சுண்டல் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

மதியம் 12 மணிக்கு உச்சி கால பூஜையும் மாலை 6 மற்றும் 8 மணிக்கு சிறப்பு பூஜையும் நடந்தது.

இதேபோல் பிங்கர் போஸ்ட் மசினி அம்மன் கோவில், முள்ளிக்கொரை சிக்கம்மன் கோவில், அக்ரஹாரம் பகுதியில் உள்ள துளிர் காத்த அம்மன் கோவில், காந்தல் மூவுலக அரசியம்மன் கோவில் உள்பட பல்வேறு கோவில்களிலும் சிறப்பு பூஜைகள் நேற்று விமர்சையாக நடந்தது.

முதல் மற்றும் இரண்டாவது ஆடி வெள்ளிக்கிழமைகளில் மழை பாதிப்பு அதிகமாக இருந்தால் பலரால் கோவிலுக்கு செல்ல முடியவில்லை. இந்த நிலை நேற்று நீலகிரியில் காலநிலை மாறி வெயில் இருந்ததால் பக்தர்கள் அதிகமான அளவில் கோவிலுக்கு வந்திருந்தனர்.

இதேபோல் பல்வேறு பக்தர்கள் கூழ் காய்ச்சி, கோவிலுக்கு வந்த பக்தர்களுக்கு கொடுத்தனர்.

மேலும் ஆடிவெள்ளியையொட்டி நேற்று பக்தர்கள் பலரும் விரதம் இருந்தனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# வெலிங்டன் குடியிருப்பு பகுதியில் ஆக்ரோஷத்துடன் மோதிக் கொண்ட காட்டு மாடுகள்



**ஊட்டி, ஆக.02-**
குன்னூர் வெலிங்டன் குடியிருப்பு பகுதியில் ஆக்ரோஷத்துடன் மோதிக் கொண்ட காட்டு மாடுகள் வாகனங்களை சேதப்படுத்தி சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

நீலகிரியில் சுற்றுச்சூழல் சங்கிலியில் மேலே உள்ள புலி முதல் அனைத்து வகை உயிரினங்களும் இங்குள்ளன. கடந்த சில நாட்களாக வனவிலங்குகள் எண்ணிக்கை அதிகரிப்பு, வனப்பகுதியில் தீவன பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களுக்காக வனப்பகுதியில் இருந்து புலி, கரடி, சிறுத்தை, காட்டெருமை, காட்டு யானை ஆகிய வன விலங்குகள் ஊருக்குள் வருகின்றன. அப்போது மனித வனவிலங்கு மோதல் ஏற்படுகிறது.

இந்த நிலையில் குன்னூரில் கடந்த சில நாட்களாக காட்டெருமைகள் ஊருக்குள் வரும் சம்பவம் அடிக்கடி நடக்கிறது. குறிப்பாக உணவு மற்றும் குடிநீர் தேடி குடியிருப்பு பகுதிகளில் சர்வசாதாரணமாக உலா வருகிறது. அவ்வப்போது ஆக்ரோஷத்துடன் பொதுமக்களை தாக்குவதால், உள்ளூர்வாசிகள் கடும் பீதியில் உள்ளனர்.

இந்தநிலையில் குன்னூர் வெலிங்டன் பேரக்ஸ் ராணுவ குடியிருப்பு குடியிருப்பு பகுதியில் இரண்டு காட்டு மாடுகள் ஆக்ரோஷத்துடன் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டன. பின்னர் அதில் ஆக்ரோசத்துடன் இருந்த காட்டு மாடு ஒன்று இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனத்தை சேதப்படுத்தி வன பகுதிக்குள் சென்றது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில் காட்டெருமைகள் ஆக்ரோசமாக மோதிக்கொண்ட காட்சிகள் வீடியோவாக சமூக வலைதளங்களில் வைரலாக பரவி அந்த பகுதி மக்களை அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது. எனவே வனவிலங்குகள் ஊருக்குள் புகுவதை தடுக்க வனத்துறையினர் காலை, மாலை நேரங்களில் அப்பகுதியில் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# இருசக்கர வாகனம் திருடிய கைது

**சென்னை ஆக 02-**
சென்னை, திருவொற்றியூர், காலடிபேட்டை பகுதியில் வசித்து வரும் ராஜ்கமல், என்பவர் வழக்கறிஞராக உள்ளார். ராஜ்கமல் கடந்த 14.ந் தேதி அன்று மாலை, டி.எச்.சாலை, தேரடி அருகே உள்ள எஸ்.பி.ஐ.ஏ.டி.எம். முன்பு அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, மீண்டும் வந்து பார்த்தபோது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து ராஜ்கமல் கடந்த 31 ந் தேதி அன்று, திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற எதிரிகள் 1. ரஞ்சித்குமார், 2.அஜித்குமார், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கட்டபெட்டு பகுதியில் வரும் 4-ந் தேதி மின் தடை

**ஊட்டி, ஆக.02-**
கட்டபெட்டு பகுதியில் 4-ந் தேதி மின்நிறுத்தம் செய்யப்படுவது குறித்து நீலகிரி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் சேகர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:-

நீலகிரி மாவட்டம் கட்டப்பெட்டு துணை மின் நிலையத்தில் வருகிற 4-ந் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதனால் ஒரசோலை, வெஸ்ட்புருக், பாக்கியா நகர், கக்குச்சி, திருச்சிக்கடி, அஜ்ஜூர், கட்டபெட்டு, நடுஹட்டி, இடுஹட்டி, தும்மனட்டி, கெந்தொறை, கூக்கல், கூக்கல்தொரை, தொரையட்டி, கடநாடு, தூனேரி, கொதுமுடி, எப்பநாடு, சின்னகுன்னூர், அணிக்கொரை, டி.மணிஹட்டி, பில்லிகொம்பை, பையங்கி, கலிங்கனட்டி, மசக்கல் ஆகிய பகுதிகளில் மின்சார வினியோகம் இருக்காது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில்

# முழு நேர பட்டய பயிற்சியில் விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் கால அவகாசம் நீட்டிப்பு

## மண்டல இணைப்பதிவாளர் ப.கந்தராஜா தகவல்

**ஈரோடு ஆக.02-**
ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு சத்தியமங்கலம் மெயின் ரோட்டில் கொங்கம் பாளையம் பிரிவு, கதவு எண். 5 யுவராஜ் பள்ளி கட்டிட வளாகம், வாய்க்கால்மேடு, எஸ் வி என் பள்ளி பின்புறம், ஈரோடு - 638 102 என்ற முகவரியில் செயல்படும் ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் 2025-26 ஆம் ஆண்டிற்கான முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சிக்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதள முகவரியான www.tncu.tn.gov.in மூலம் மட்டுமே 15.05.2025 முதல் பெறப்படுகிறது.

விண்ணப்ப கட்டணம் ரூ.100/-ஐ இணையவழியில் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 20.07.2025 என்று அறிவித்திருந்த நிலையில், விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தற்போது 31.07.2025 முதல் 22.08.2025 அன்று வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது..பயிற்சியில் சேருவதற்கு 01.07.2025 அன்று குறைந்தபட்சம் 17 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு இல்லை. மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச கல்வி தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு (+2) தேர்ச்சி அல்லது S.S.LC தேர்ச்சியுடன் 3 வருட பட்டயப்படிப்பு (Diploma) தேர்ச்சி (10+3) பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.மேற்கூறிய பயிற்சிக்கான காலம் ஓராண்டுகள் (2 பருவ முறைகள்) மற்றும் கட்டணம் ரூபாய் 20,850/- ஆகும். இதர தகவல்களை அறிந்துகொள்ள www.tncu.tn.gov.in என்ற இணையதளத்திலும், கூடுதல் விவரங்களுக்கு, ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலைய தொலைபேசி எண் 0424-2998632 மற்றும் அலைபேசி எண். 94892 40485 வாயிலாக தொடர்பு கொள்ளலாம். எனவே கூட்டுறவு பயிற்சி பெற விருப்பமுள்ளவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறதுஇத்தகவலை ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் .ப.கந்தராஜா தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months thereafter. I MONISHA.R, S/O RAJENDRAN.S aged 22 years Permanently residing at 21, MAANIKKAMPILLAITHOTTAM, THANTHAIPERIYARNAGAR, VANNARAPET, COONOOR, THE NILGIRIS DISTRICT, Tamil Nadu, 643102 Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

MONISHA.R

## PUBLIC NOTICE

Take notice that my client ANBAZHAGAN.J has filed an application before RDO, Udhagamandalam under Section 13(3)of Registration of Births and Deaths Act, 1969, read with Rule 9(3) of the Tamilnadu Registration of Births and Deaths Rules, 2000 to Register the Birth of his son namely Mr.SATHEESH KUMAR JOGHEE ANBAZHAGAN born on 27-05-1985 at 3/90, Ithalar Village, Ithalar Post, Ithalar Panchayat, Kundah Taluk, The Nilgiris.

J.H.MAHESWARI, B.A.L., LL.B.,
Advocate/Notary Public,
Udhagamandalam, The Nilgiris.

## மாண்புமிகு மோட்டார் வாகன இழப்பீடு நீதிமன்றம், குளித்தலை

MCOP.No.121/2024

A.கண்ணன்,
த/பெ.அங்கமுத்து,
நாகதோட்டக்காரன்பட்டி,
பாதிரிப்பட்டி, குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்

– எதிர் –

முகமது யாஷிப்,
த/பெ.சாகுல் ஹமீது,
எண்.11–88–3 4–வது தெரு,
ஸ்ரீதேவி நகர்,
கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர்.
– 1–ம் எதிர்மனுதாரர்

மனுதாரர் தரப்பில் கொடுக்கப்பட்ட அறிவிப்பு

மேற்படி முதல் எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்தின் மூலம் பலமுறை அறிவிப்புகள் அனுப்பியும் அறிவிப்புகள் சார்வாகவில்லை. அதனால் மேற்படி நீதிமன்றம் கட்டளையிட்டதற்கிணங்க தமிழ் நாளிதழ் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது. மேற்படி மனு மீதான வாய்தா 28.08.2025 ஆம் நாள் போடப்பட்டுள்ளது. மேற்படி மனுவுக்கு ஆட்சேபணை ஏதுமிருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி தினத்தில் காலை 10.30 மணியளவில் முன்னிலையாகித் தங்களது ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பிடப்படும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

A.சக்திவேல், B.A.,B.L.,
A.B.மீனாட்சிசுந்தரம், B.A.,B.L.
வழக்கறிஞர்கள், குளித்தலை.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு
**இராணிப்பேட்டை நகராட்சி**

நக.எண். 1395 / 2023 / இ1 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்: 15.07.2025

இந்நகராட்சியின் 1 முதல் 30 வார்டுகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பதிக்கவும் விடுபட்ட மற்றும் கூடுதல் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் கீழ்கண்டுள்ள பணிக்கு ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 20.08.2025-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை மின்னனு (E-Tender) Online முறையில் பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் https://www.tntenders.gov.in என்ற இணைய தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தினம் எதிர்பாராத விதமாக அலுவலக விடுமுறை நாளாக இருப்பின், அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். எவ்வித காரணமும் அல்லது முன்னறிவிப்புமின்றி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை நிர்வாக காரணங்களின் நிமித்தம் ஒத்தி வைக்கவோ அல்லது காரணம் ஏதும் தெரிவிக்காமல் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவோ முழு அதிகாரம் உண்டு.

E-Tender(Online) முறையில் ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்தவர்களின் டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி பெற நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் வங்கி வரைவோலையாக இந்நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும் பணி குறித்தான விவரம் தேவைப்பட்டால் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | முன்வைப்பு தொகை 1% ரூ | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் 1 முதல் 30 வார்டுகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பதிக்கவும் விடுபட்ட மற்றும் கூடுதல் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி. | 1230.00 | ரூ.12,30,000/- | 6 மாதங்கள் |

செ.ம.தொ.இ./4038/ ஒப்பந்தப்புள்ளி / 2025 — ஆணையாளர், இராணிப்பேட்டை நகராட்சி.

தமிழ்நாடு அரசு
**பேரூராட்சிகள் நிர்வாகம்**
**மதுரை மாவட்டம் - தே.கல்லுப்பட்டி பேரூராட்சி**
**தேசிய சுகாதார மானிய திட்டம் 2025-2026**

ந.க.எண். 135/ 2025 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள் : 23.07.2025

1. முழுமையான விவரங்களுக்கு http://tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் 1.ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட பணி (ஒன்று) ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 23.07.2025 முதல் 12.08.2025 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.

| 4. | | |
|---|---|---|
| | அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் | 12.08.2025 மாலை 3.00 மணி |
| | ஆ) இணையதளம் வாயிலாக மட்டுமே பெறப்படும் மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 12.08.2025 மாலை 4.00 மணி |

செ.ம.தொ.இ./ 4039 / ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்
தே.கல்லுப்பட்டி பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
**திருப்பூர் மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம் முத்தூர் பேரூராட்சி**

அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ITPHDS) 2025-2026
முத்தூர் பேரூராட்சி வார்டு எண்.6, தொட்டியபாளையம் தோப்பு தோட்டம் பகுதியில் புதிய சமுதாயக்கூடம் அமைத்தல். மதிப்பீடு 80.00 இலட்சம்

ந.க.எண்: 166/2025 — **மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்: 22.07.2025

1. முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. திருப்பூர் மாவட்டம் முத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் சமுதாயக்கூடம் அமைக்கும் பணி (ஒன்று) செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளில் இலவசமாக 22.07.2025 முதல் 07.08.2025 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் : 07.08.2025 மாலை 3.00 மணி
   ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 07.08.2025 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ/3887/ஒப்பந்தப்புள்ளி/2025
செயல் அலுவலர், முத்தூர் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

# டிசம்பரில் இந்தியா வருகிறார் கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸி

## தோனி - கோலியுடன் விளையாடுகிறார்?



**மும்பை, ஆக.02-**

அர்ஜென்டினா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி வரும் டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

**கிரிக்கெட் வீரர்களுடன்...**

கால்பந்து உலகில் 8 முறை தங்கப் பந்து (பேலந் தோர்) வென்ற ஒரே வீரராக மெஸ்ஸி இருக்கிறார். மும்பையின் வான்கடே திடலில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள வரும் டிச.11ஆம் தேதி மெஸ்ஸி வருவதாக கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் 7 நட்சத்திர கிரிக்கெட் வீரர்களுடன் மெஸ்ஸி இணைந்து கிரிக்கெட் விளையாட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

**கொல்கத்தாவில்...**

மும்பையை தவிர்த்து கொல்கத்தா, டில்லிக்கும் மெஸ்ஸி வரவிருக்கிறார். டிச.13 முதல் 15ஆம் தேதி வரை பல நிகழ்ச்சிகளில் மெஸ்ஸி கலந்துகொள்ளவிருக்கிறார். கொல்கத்தாவில் குழந்தைகளுக்கான கால்பந்து போட்டி உள்பட பல நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன. இந்த நிகழ்வில் மமதா பானர்ஜி கலந்து கொள்கிறார். இவர் மெஸ்ஸியின் தீவிர ரசிகர். சமீபத்தில் மெஸ்ஸியின் கையெழுத்திட்ட பெற்ற ஜெர்ஸியை தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

**2-வது முறையாக...**

இந்தாண்டின் தொடக்கத்தில் கேரள அமைச்சர் மெஸ்ஸி அக்டோபர் அல்லது நவம்பரில் திருவனந்தபுரம் வருவதாக கூறப்பட்டிருந்தது. நட்புறவான போட்டி ஒன்றில் மெஸ்ஸி பங்கேற்க இருந்தது. பின்னர், இந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு முன்பாக மெஸ்ஸி 2011-இல் கொல்கத்தா வந்திருந்தார். தற்போது, இரண்டாவது முறையாக இந்தியாவுக்கு வரவிருக்கிறார்.

**45 கோப்பைகள்...**

38 வயதான மெஸ்ஸி 388 அசிஸ்ட்ஸ், 874 கோல்கள் அடித்துள்ளார். 8 பேலந் தோர், 6 ஐரோப்பியன் தங்கக் காலணிகள், 45 கோப்பைகளை வென்றுள்ளார். கடந்த 2022-இல் உலகக் கோப்பை வென்ற அவர் ஓராண்டில் 91 கோல்கள் அடித்து சாதனை நிகழ்த்தியுள்ளார்.

# ஓவல் டெஸ்ட்: முதல் இன்னிங்ஸில் இந்தியா 224 ரன்களுக்கு ஆட்டமிழப்பு



**லண்டன், ஆக.02-**

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 224 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

**இங்கிலாந்து பந்துவீச்சு...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் (ஜூலை 31) தொடங்கியது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, இந்திய அணி முதல் இன்னிங்ஸில் விளையாடியது.

**கருண் நாயர் அரை சதம்...**

இந்திய அணியில் தொடக்க ஆட்டக்காரர்களான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 2 ரன்கள் எடுத்தும், கே.எல்.ராகுல் 14 ரன்கள் எடுத்தும் ஆட்டமிழந்தனர். சாய் சுதர்சன் 38 ரன்கள், ஷுப்மன் கில் 21 ரன்கள் எடுத்தனர். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய கருண் நாயர் 109 பந்துகளில் 57 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 8 பவுண்டரிகள் அடங்கும். துருவ் ஜுரெல் 19 ரன்கள், வாஷிங்டன் சுந்தர் 26 ரன்கள் எடுத்தனர். முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 224 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

**ஜோஷ் டங் 3 விக்கெட்...**

இங்கிலாந்து தரப்பில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய கஸ் அட்கின்சன் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார். ஜோஷ் டங் 3 விக்கெட்டுகளையும், கிறிஸ் வோக்ஸ் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

**அதிரடி துவக்கம்...**

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களான ஜாக் கிராவ்லி - பென் டக்கெட் வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். இந்திய அணியின் பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடி 92 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தது. பென் டக்கெட் 43 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து ஆலி போப் களமிறங்கினார். சிறப்பாக ஆடிய கிராவ்லி 64 ரன்களிலும், ஆலி போப் 22 ரன்களிலும் அவுட்டாகினார். தற்போது வரை இங்கிலாந்து அணி 26 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 147 ரன்கள் அடித்துள்ளது. ஜோ ரூட் 9 ரன்களுடனும், ஹாரி புரூக் 4 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

# தலையில் வெள்ளை பட்டை அணிந்து களமிறங்கிய இங்கிலாந்து வீரர்கள்

**லண்டன், ஆக.02-**

5-வது டெஸ்ட் போட்டியின் 2-வது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர்கள் தலையில் வெள்ளை பட்டை அணிந்து களமிறங்கினர்.

**இந்தியா 224 ரன்கள்...**

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் ஜெயித்த இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 69.4 ஓவர்களில் 224 ரன்கள் அடித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக கருண் நாயர் 57 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கஸ் அட்கின்சன் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**வலுவான அடித்தளம்...**

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களான ஜாக் கிராவ்லி - பென் டக்கெட் வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். இந்திய அணியின் பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடி 92 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தது. பென் டக்கெட் 43 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து ஆலி போப் களமிறங்கினார். சிறப்பாக ஆடிய கிராவ்லி 64 ரன்களிலும், ஆலி போப் 22 ரன்களிலும் அவுட்டாகினார். தற்போது வரை இங்கிலாந்து அணி 26 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 147 ரன்கள் அடித்துள்ளது. ஜோ ரூட் 9 ரன்களுடனும், ஹாரி புரூக் 4 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

**வெள்ளை பட்டை...**

நேற்றைய நாள் ஆட்டத்தில் (2-வது நாள்) இங்கிலாந்து வீரர்கள் தலையில் வெள்ளை பட்டை அணிந்து களமிறங்கினர். இதற்கான காரணம் என்னவெனில், இங்கிலாந்து முன்னாள் வீரரான கிரகாம் தோர்பே கடந்த வருடம் (55 வயது) இயற்கை எய்தினார். 1993 - 2005 வரையிலான காலகட்டங்களில் இங்கிலாந்துக்காக அவர் 100 டெஸ்ட் 82 ஒருநாள் போட்டிகளில் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

**தோர்பேக்கு கவுரவம்...**

அதில் பல வெற்றிகளில் பங்காற்றிய அவர் பெரும்பாலும் களத்திற்கு வரும்போது தலையில் ஹெட் பேண்ட் அணிவார். 1969 ஆகஸ்ட் 1ம் தேதி பிறந்த அவர் 2024 ஆகஸ்ட் 4ம் தேதி இயற்கை எய்தினார். அதனாலேயே அவருடைய பிறந்தநாளான இன்று இங்கிலாந்து அணியினர் தலையில் வெள்ளை பேண்ட் அணிந்து அவரை கவுரவித்தனர்.

# ரகானே, புஜாராவுக்கு இடமில்லை

துலீப் கோப்பை கிரிக்கெட் போட்டி (4 நாள் ஆட்டம்) இந்த மாதம் 28-ந் தேதி முதல் செப்டம்பர்15-ந் தேதி வரை பெங்களூருவில் நடக்கிறது. இந்த போட்டியில் வடக்கு, கிழக்கு, மத்திய, வடகிழக்கு மண்டலங்கள் காலிறுதியில் மோதுகின்றன. தெற்கு மற்றும் மேற்கு மண்டல அணிகள் நேரடியாக அரையிறுதியில் கால்பதிக்கின்றன.

இந்நிலையில் இந்த தொடருக்கான மேற்கு மண்டல அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஷர்துல் தாகூர் தலைமையிலான அந்த அணியில் இந்திய நட்சத்திர வீரர்களான ஸ்ரேயாஸ் ஐயர், ஜெய்ஸ்வால், கெய்க்வாட் மற்றும் சர்பராஸ் கான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இருப்பினும் அந்த அணியில் முன்னணி வீரர்களான ரகானே மற்றும் புஜாராவுக்கு இடமளிக்கப் பட வில்லை. மேற்கு மண்டல அணி விவரம் பின்வருமாறு:- ஷர்துல் தாக்கூர் (கேப்டன்), யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஆர்யா தேசாய், ஹர்விக் தேசாய், ஷ்ரேயாஸ் ஐயர், சர்பராஸ் கான், ருதுராஜ் கெய்க்வாட், ஜெய்மீத் படேல், மனன் ஹிங்ராஜியா, சவுரப் நாவலே, ஷம்ஸ் முலானி, தனுஷ் கோட்டியன்,தர்மேந்திர ஜடேஜா, துஷார் தேஷ்பாண்டே, அர்சான் நாக்வாஸ்வாலா.

# சுதந்திர தின உரைக்கான யோசனைகள்: பகிர பிரதமர் நரேந்திரமோடி அழைப்பு

**புதுடில்லி, ஆக.02-**

சுதந்திர தின விழா வருவதையொட்டி, பிரதமரின் உரையில் இடம்பெற வேண்டிய விஷயங்கள் குறித்த யோசனைகளைப் பகிருமாறு நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

வருகிற ஆகஸ்ட் 15 ஆம் தேதி 79-வது ஆண்டு சுதந்திர தின விழா கொண்டாடப்படவிருக்கிறது. சுதந்திர தினத்தன்று டில்லி செங்கோட்டையில் பிரதமர் கொடியேற்றி உரையாற்றுவார். அந்தவகையில் இந்தாண்டுக்கான உரையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து மக்கள் தங்கள் கருத்துகளைப் பகிர பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இதுபற்றி அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “இந்த ஆண்டு சுதந்திர தின விழா நெருங்குவதையொட்டி நான் இந்திய மக்களிடமிருந்து யோசனைகளைக் கேட்க ஆவலுடன் இருக்கிறேன். இந்த ஆண்டு சுதந்திர தின உரையில் என்னென்ன கருப்பொருள்கள் அல்லது விஷயங்கள் இடம்பெற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? உங்களுடைய எண்ணங்களை நமோ செயலி, MyGov தளங்களில் பகிருங்கள்” என்று பதிவிட்டுள்ளார்.

# பதிவு செய்யப்பட்ட கட்சிகள் பட்டியலில் த.வெ.க. இணைப்பு

**சென்னை, ஆக.02-**

பதிவு செய்யப்பட்ட கட்சிகள் பட்டியலில் தமிழக வெற்றிக்கழகத்தை இணைத்து மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தமிழக வெற்றிக்கழகத்தை பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் பட்டியலில் சேர்த்து கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை பின்பற்றி, மாநில தேர்தல் ஆணையமும் தமிழக வெற்றிக்கழகத்தை பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் பட்டியலில் சேர்த்து தற்போது அறிவிப்பாணை வெளியிட்டுள்ளது. பனையூர் கிழக்கு கடற்கரை சாலை முகவரியில் கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று விடுதலை சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர் கட்சி ஆகியவற்றை அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகள் பட்டியலில் சேர்த்து இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்ததை ஏற்றுக்கொண்டு மாநில தேர்தல் ஆணையமும் அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

# பயிற்சியாளரானார் கலித் ஜமில்

இந்திய கால்பந்து அணியின் முன்னாள் வீரரான கலித் ஜமில், ஆண்கள் அணியின் தலைமை பயிற்சியாளரான நியமிக்கப்பட்டுள்ளார். ஐ-லீக் 2017 சீசனில் ஐஸ்வால் கால்பந்து கிளப் அணியை வெற்றிகரமாக வழிநடத்தி (பயிற்சியாளராக) சாம்பியன் பட்டம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். 48 வயதாகும் கலித் ஜமில், தற்போது ஜாம்ஷெட்பூர் கால்பந்து கிளப் அணியின் பயிற்சியாளராக உள்ளார். அனைத்து இந்திய கால்பந்து பெடரேசனின் நிர்வாகக் குழு கலித் ஜமிலை தேர்வு செய்துள்ளது.

இறுதிப் பட்டியலில் மூன்று பேரை தேர்வு செய்து வைத்திருந்தது. அதில் இரண்டு போட்டியாளர்கள் முன்னாள் இந்திய பயிற்சியாளர் ஸ்டீபன் கான்ஸ்டைன் மற்றும் ஸ்லோவாகியா தேசிய அணியின் ஸ்டீபன் தர்கோவிக் ஆகியோர் ஆவார்கள். கலித் ஜமித் ஆகஸ்ட் 29ஆம் தேதியில் இருந்து, இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக செயல்பட இருக்கிறார். இந்தியா ஆகஸ்ட் 29ஆவது தேதியில் இருந்து மத்திய ஆசிய கர்பந்து அசோசியேசன் தேசிய கோப்பை தொடரில் விளையாடுகிறது. இந்த போட்டி தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தானில் நடக்கிறது.

# 5 விக்கெட் வீழ்த்திய கிஷோர்



இங்கிலாந்தின் செஸ்டரில் துர்காம்- சுர்ரே அணிகளுக்கு இடையிலான கவுன்ட்டி கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. சுர்ரே அணிக்காக தமிழகத்தைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் சாய் கிஷோர் விளையாடி வருகிறார். முதல் இன்னிங்சில் துர்காம் 153 ரன்னில் சுருண்டது. சாய் கிஷோர் 2 விக்கெட் வீழ்த்தினார். பின்னர் சுர்ரே முதல் இன்னிங்சில் 322 ரன்கள் குவித்தது.

169 ரன்கள் பின்தங்கிய நிலையில் துர்காம் அணி 2ஆவது இன்னிங்சில் பேட்டிங் செய்தது. அந்த அணி 344 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தது. சாய் கிஷோர் அபாரமான பந்து வீசி 5 விக்கெட் வீழ்த்தினார். 113.4 ஓவரில் 41.4 ஓவர்கள் வீசினார். இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 7 விக்கெட்டுகள் சாய்த்தார். பின்னர் 176 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய சுர்ரே 5 விக்கெட் இழப்பிற்கு 176 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# இந்தியாவுக்கு எதிராக கிராவ்லி - டக்கெட் சாதனை

**லண்டன், ஆக.02-**

இந்தியாவுக்கு எதிராக கிராவ்லி - பென் டக்கெட் ஜோடி மாபெரும் சாதனை படைத்துள்ளது.

**224 ரன்களுக்கு ஆல் அவுட்...**

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டாஸ் ஜெயித்த இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 69.4 ஓவர்களில் 224 ரன்கள் அடித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக கருண் நாயர் 57 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கஸ் அட்கின்சன் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**கிராவ்லி-டக்கெட் ஜோடி...**

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஜாக் கிராவ்லி - பென் டக்கெட் களமிறங்கினர். இருவரும் ஆரம்பம் முதலே இந்திய அணியின் பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்டனர். இதனால் ரன் ரேட் வேகமாக நகர்ந்தது.

**8-வது முறை...**

வெறும் 7 ஓவர்களில் இந்த கூட்டணி இங்கிலாந்து அணியை 50 ரன்களை கடக்க வைத்தது. டெஸ்ட் போட்டிகளில் பென் டக்கெட் - ஜாக் கிராவ்லி ஜோடி இந்தியாவுக்கு எதிராக 50+ ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைப்பது இது 8-வது முறையாகும்.

புதிய சாதனை...

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவுக்கு எதிராக அதிக முறை 50+ ரன்கள் அடித்த இங்கிலாந்து தொடக்க ஜோடி என்ற மாபெரும் சாதனையை பென் டக்கெட் - ஜாக் கிராவ்லி படைத்துள்ளனர். இதற்கு முன்னர் குக் - ஸ்டிராஸ் ஜோடி 7 முறை அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள டக்கெட் - ஜாக் கிராவ்லி கூட்டணி புதிய சாதனை படைத்துள்ளது.

**சமன் செய்தது...**

ஒட்டு மொத்தத்தில் டெஸ்டில் இந்தியாவுக்கு எதிராக அதிக முறை 50+ ரன்கள் அடித்த தொடக்க ஜோடிகளின் சாதனை பட்டியலில் முதலிடத்தில் உள்ள வெஸ்ட் இண்டீசின் கோர்டன் கிரீனிட்ஜ் & டெஸ்மண்ட் ஹேய்ன்ஸ் கூட்டணியை (8 முறை) பென் டக்கெட் - ஜாக் கிராவ்லி ஜோடி சமன் செய்துள்ளது.

## திடக்கழிவு மேலாண்மை:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்



**சென்னை, ஆக. 02-**

முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (ஆக. 1) தலைமைச் செயலகத்தில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மையில் ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்கிடும் வகையில் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்திற்கும் சென்னை-இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு முன்னெடுப்புகளில் தற்போது தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் தூய்மை இயக்கம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தினை செயல்படுத்திட தூய்மை தமிழ்நாடு நிறுவனம்என்ற அமைப்பு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தூய்மை இயக்கத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் மாநிலத்திற்கான நிலையான கழிவு மேலாண்மை தீர்வுகளுக்கான நடிவடிக்கைகளை தூய்மை தமிழ்நாடு நிறுவனம் மேற்கொண்டுவருகிறது. அதன் ஒரு பகுதியாக, தூய்மை தமிழ்நாடு நிறுவனம் மாநிலம் முழுவதும் உருவாகும் திடக்கழிவுகளை அறிவியல் பூர்வமாக அதிநவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சரியான முறையில் கையாளவும், அவற்றை மறுசுழற்சி செய்யவும் ஒரு வலுவான ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்க சென்னை - இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து செயல்படவுள்ளது. இதற்காக, தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் சென்னை-இந்திய தொழில்நுட்ப நிறுவன இயக்குநருடன் புரிந்துனர்வு ஒப்பந்தம் நேற்று முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

## மத்திய அரசிடம் பேசி

# பிளாஸ்டிக் லைட்டர்களை தடை செய்ய நடவடிக்கை எடுப்போம்

## கோவில்பட்டியில் இ.பி.எஸ். உறுதி



**கோவில்பட்டி, ஆக.02-**

தீப்பெட்டி தொழிலுக்கு சவாலாக உள்ள ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் லைட்டர்களை தடை செய்ய மத்திய அரசிடம் பேசி நடவடிக்கை எடுப்போம் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உறுதி அளித்தார்.

மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற பிரச்சார பயணத்துக்காக நேற்று முன்தினம் இரவு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் கோவில்பட்டிக்கு வந்தார். தொடர்ந்து நேற்று காலை அருள்தரும் செண்பகவல்லி அம்மன் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர் தனியார் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மற்றும் கடலை மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது நேஷனல் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் எம்.பரமசிவம் பேசும்போது, தீப்பெட்டி தொழிலுக்கு அச்சுறுத்தலாக உள்ள ஒரு முறை பயன்படுத்தக்கூடிய லைட்டர்களை தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் கே.கண்ணன் பேசுகையில், அதிக புரதச்சத்து கொண்ட கடலைமிட்டாயை சத்துணவு திட்டத்தில் இணைக்க வேண்டும்”, என்றார்.

தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது: அ.தி.மு.க. ஆட்சியின் போது தீப்பெட்டிக்கு விதிக்கப்பட்டிருந்த 18 சதவீத ஜி.எஸ்.டி. வரியை 12 சதவீதமாக குறைக்க மத்திய அரசிடம் பேசி நடவடிக்கை எடுத்தோம்.

இப்போது தீப்பெட்டி தொழிலுக்கு நெருக்கடியான சூழல் உருவாகியுள்ளது.. தீப்பெட்டி தொழிலுக்கு சவாலாக உள்ள லைட்டர்களை தடை செய்ய வேண்டும். இதற்காக அ.தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் தனி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தோம். நாங்களும் மத்திய அரசை தொடர்பு கொண்டு பிளாஸ்டிக் லைட்டர்களை தடை செய்ய தேவையான முயற்சிகளை மேற்கொள்வோம்.

தாமிரபரணி - வைப்பார் திட்டம் தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது. அந்த் திட்டம் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் தொடங்கப்படும். விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க அ.தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தீப்பெட்டி மற்றும் கடலை மிட்டாய் உற்பத்தி தொழில் சிறக்க அ.தி.மு.க. என்றும் துணை நிற்கும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியின் போது வடக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் கடம்பூர் செ. ராஜூ வரவேற்றார். முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார் சி.விஜயபாஸ்கர்.தளவாய் சுந்தரம், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் காஞ்சி பன்னீர்செல்வம் மற்றும் தீப்பெட்டி, கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை ஐக்கிய கிறிஸ்தவ பேரவையை சேர்ந்தவர்கள், திருநெல்வேலி தெட்சிண மாற நாடார் சங்க நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் சந்தித்தனர். அதேபோல் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மற்றும் கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் தங்களது கோரிக்கை மனுக்களையும் வழங்கினர்.

## அஞ்சல் துறையில் மாற்றம்:

# செப்.1 முதல் பதிவு அஞ்சல் சேவை ரத்து

**புதுடில்லி, ஆக.02-**

அஞ்சல் துறையின் சேவையில் புதிய மாற்றம் மேற்கொள்ளப் படுகிறது, செப்.1 முதல் பதிவு அஞ்சல் சேவை நீக்கப்பட்டு, விரைவு அஞ்சலுடன் இணைக்கப்படுவதாக இந்திய அஞ்சல் துறை அறிவித்துள்ளது.

இந்திய அஞ்சல் சேவையின் செயல்பாட்டுக் கட்டணம் மற்றும் விரைவாக அஞ்சலை சேர்க்கும் வகையிலும் விரைவாக அஞ்சலை சேர்க்கும் வகையிலும் இந்த புதிய மாற்றம் மேற்கொள்ளப்படுவதாகவும், இரண்டு பிரிவுகளை ஒன்றிணைக்கும் போது ஒரே பிரிவில் அஞ்சல் விநியோகிக்கப்படும் நிலவரத்தை மக்களால் எளிதாகக் கண்காணிக்கவும் இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைப் பின்போது, ஒரு அஞ்சலின் பாதுகாப்புக் கருதி பதிவு அஞ்சலை பயன்படுத்தி வந்த வாடிக்கையாளர்கள், விரைவு அஞ்சலையும் பயன்படுத்திக் கொள்ளலாம். அஞ்சல் வழங்கப்பட்டதற்கான ரசீதும், உரியவரிடம் சேர்க்கப்பட்டதற்கான சான்றும், விரைவு அஞ்சலில் கூடுதலாக சேர்க்கப்படும். விரைவு அஞ்சலையும், பதிவு அஞ்சலையும் ஒன்றிணைக்கும் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆகஸ்ட் மாதம் இறுதி வரை இவ்விரு சேவைகளும் வழக்கம் போல செயல்படும். செப்டம்பர் முதல், பாதுகாப்பாகச் சென்று சேர வேண்டிய அஞ்சல்களை விரைவு அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். தற்போது, விரைவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் அஞ்சல்கள் அடுத்த நாளே விநியோகிக்கப்படும். தொலைதூர அஞ்சல்கள் அதிகபட்சம் 5 நாள்களுக்குள் சென்று சேரும் என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

சத்திரரெட்டியபட்டி அரசு பள்ளியில் காணொலி காட்சி மூலம்

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முதல்வர் இன்று துவக்கி வைக்கிறார்

## மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தகவல்



**விருதுநகர், ஆக 02-**
தமிழகம் முழுவதும் "நலம் காக்கும் ஸ்டாலின்" என்ற திட்டத்தின்கீழ் 1256 பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள், 17 சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு பிரதி வாரம் சனிக்கிழமை தோறும் நடைபெற உள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 36 பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. மேலும் இத்திட்டமானது விருதுநகர் மாவட்டத்தில் 02 இன்று சத்திரரெட்டியபட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் வைத்து காணொலி காட்சி மூலம் முதல்வர் தொடங்கி வைக்கிறார். இம்முகாமில் உயர் இரத்த அழுத்தம், எக்கோ, எக்ஸ்ரே, நீரழிவுநோய் கண்டறிதல்,மார்பக புற்றுநோய், வாய் புற்றுநோய் பரிசோதனை, மின் இதய வரைபடம், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்,கருப்பை வாய் பரிசோதனை, காச நோய் மற்றும் தொழுநோய், சிறுநீரக நோய் பரிசோதனை, உள்ளிட்ட 24 வகையான இரத்த பரிசோதனைகளும் மற்றும் பொது மருத்துவம், மகளிர் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், கண் மருத்துவம், இயன்முறை மருத்துவம், நீரழிவுநோய் மருத்துவம்,பொது அறுவை சிகிச்சை, குழந்தை மருத்துவம், தோல் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம்,சித்தா மருத்துவம்,எலும்பு மருத்துவம்,இருதய மருத்துவம்,பல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம்,ஆயுர்வேத மருத்துவம் போன்ற இலவச சிறப்பு மருத்துவ சிகிச்சைகளும் வழங்கப்பட உள்ளன.


மேலும், இம்முகாமில் மேலே குறிப்பிட்டுள்ள பரிசோதனைகள் மட்டும் இன்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்று திறனாளிகளுக்கான அரசு அடையாள அட்டை வழங்குதல், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் வருவாய்துறையினர் மூலமாக வருமானச் சன்றிதழ் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு இச்சேவைகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா கேட்டுகொள்கிறார்.

# பாலின உளவியல் கருத்தரங்கம்

**திருமங்கலம், ஜூலை 02-**
திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பாக பாலின உளவியல் கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.இந்நிகழ்வில் தமிழ் துறை தலைவர் அ.வளர்மதி வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் பா. சிங்காரவேலன் தலைமை ஏற்று நடத்தினார்.

இந்நிகழ்வில் மதுரை மீனாட்சி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணை பேராசிரியர் தை. ஹெலன் கிறிஸ்டியானா பாலின உளவியல் கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்து ஆண்கள் மற்றும் பெண்கள் சமூகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் மற்றும் நம் தமிழ் சமூகத்தின் கலாச்சாரம், பாரம்பரியம் ,அரசியல், மாணவ மாணவிகளின் மனரீதியாக அவர்கள் எப்படி இருக்க வேண்டும், போன்ற பல கருத்துக்களை மாணவ மாணவிகள் புரிந்து கொள்ளும் வகையில் உளவியல் ரீதியாக சிறப்புரையாற்றினார்.

இறுதியாக இந்நிகழ்வில் மாணவ மாணவிகளிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.இந்நிகழ்வில் கல்லூரி நாட்டு நல பணி திட்ட அலுவலர் மு.ஜெகநாதன் நன்றி கூறினார். இந்நிகழ்வில் அனைத்துறை பேராசிரியர்களும் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டு இந்நிகழ்வினை முதலாம் ஆண்டு ஆங்கிலத் துறை மாணவி மோனிஷா ஸ்ரீ தொகுத்து வழங்கினார்.



அருப்புக்கோட்டை முத்துமாரியம்மன் ஆடி மூன்றாவது வெள்ளியை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் அம்மன் பொதுமக்களுக்கு அருள் பாலித்த காட்சி.

# திருமங்கலத்தில் ராசகாளி அம்மன் கோவிலில் ஆடிமாத வளைகாப்பு விழா

**திருமங்கலம், ஆக. 02-**
மதுரை மாவட்டம், திருமங்கலம் நகர்,வாகைக்குளம் பிரிவு பகுதியில் உள்ள அருள்மிகு ஐகோர்ட் பிள்ளையார், ராசகாளியம்மன், சந்தன கருப்பசாமி திருக்கோவிலில் ஆடி மாத வளைகாப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. அப்போது பிள்ளையார், ராசகாளியம்மன், சந்தனக் கருப்பசாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு செந்தமிழில் பூஜைகள் நடத்தப்பட்டது. இதனை தொடர்ந்து ஆடி மாதம் 3-ம் வெள்ளிக்கிழமையான நேற்று மாலை ராசகாளி அம்மனுக்கு ஐந்து வகை சாதம் படையலுடன் சிறப்பு நன்னீராட்டு மற்றும் வளைகாப்பு வைபவம் வேத மந்திரங்கள் முழங்கிட நடைபெற்றது. இதில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பு வழிபாடு நடத்தினர். இதையடுத்து கோவில் முன்பாக ஆடி கூழ் காய்ச்சப்பட்டு வழிபாடுகளில் பங்கேற்ற பொதுமக்கள் அனைவருக்கும் ஆடி கூழ் பிரசாதமாக வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை



வாகைக்குளம் பிரிவு ஐகோர்ட் பிள்ளையார், ராசகாளி அம்மன்,சந்தனக்கருப்பசாமி திருக்கோயில் நிர்வாக கமிட்டியினர், இளைஞரணி நண்பர்கள் செய்திருந்தனர்.

# நத்தம் அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**நத்தம், ஆக. 02-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே முளையூரில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது. இதற்கு தி.மு.க. தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார் தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டி அம்பலம், தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் பழனிச்சாமி, சேக்சிக்கந்தர்பாட்சா, நகர செயலாளர் ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி கலந்து கொண்டு பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று சிறப்புரையாற்றினார். இதில் மகளிர் உரிமை தொகை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வீட்டுவசதி உள்ளிட்ட 13 அரசு துறைகளின் சார்பில் மனுக்கள் பெறப்பட்டது. முகாமில் மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமாரசாமி, தாசில்தார் ஆறுமுகம், யூனியன் ஆணையாளர்கள் கிருஷ்ணன், மகுடபதி, மண்டல துணை வட்டாட்சியர் சுந்தரபாண்டியன் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காணப்படும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய ரோலர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில்

# தங்கம் பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு மதுரையில் உற்சாக வரவேற்பு



**மதுரை, ஆக 02-**
ஆசிய ரோலர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் பதக்கம் வென்ற இந்திய அணிக்கு மதுரை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தென் கொரியா தலைநகர் சியோலில் தெற்குஆசியா ரோலர் ஸ்கேட்டிங்ஆக்கி சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில்ஆஸ்திரேலியா,நியூசிலாந்து, ஜப்பான், சீனா, சிங்கபூர்,தாய்லாந்து, மலேசியா, இந்தியா உள்ளிட்ட18 நாடுகள் பங்கேற்றன.கடந்த 22-ந் தேதி தொடங்கி30-ந் தேதிநடைபெற்றது.வரை ஸ்கேட்டிங் ரோலஸ் போட்டி பெண்கள் பிரிவில் கால் இறுதிக்கு தகுதி பெற்ற இந்திய அணி அரை இறுதியில் ஆஸ்திரேலியாவுடன் வெற்றி பெற்று இறுதிப்போட்டியில் ஜப்பான் அணியுடன் மோதி வெற்றி பெற்று தங்கம் வென்று ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தையும் இந்திய அணி பெற்றது.

இதேபோல் ஆண்கள்பிரிவு ரோலர் ஸ்கேட்டிங் பிரிவில் இந்திய அணி வெண்கலப்பதக்கம் வென்றது. தெற்காசியவிளையாட்டுப் போட்டியில் இந்திய அணி தங்கம் வென்றது இதுவே முதல் முறை. இந்திய பெண்கள் அணி ரோலர் ஸ்டேட்டிங் பிரிவில் சிறப்பாக விளையாடி பெருமை சேர்த்துள்ளது.

நமது இந்தியாவிற்குகிடைத்த பெருமை இந்திய ரோலர் ஸ்கேட்டிங் அணிக்காக விளையாடிய தமிழகத்தைச் சேர்ந்த 32 வீரர்கள் ரோலர் ஸ்கேட்டிங்,இன்லைன் ஸ்கேட்டிங் உள்ளிட்ட போட்டிகளில் பெண்கள் மற்றும் சீனியர்ஆண்கள் பிரிவில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளனர்.

இந்த நிலையில் டெல்லியில் இருந்து விமான மூலம் மதுரை வந்த வீரர்களுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்தவீராங்கனை யோகிதா மற்றும் பயிற்சியாளர் அலெக்ஸ் கூறுகையில், தென்கொரியாவில் நடைபெற்ற ஏசியன் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று வந்துள்ளோம். 8 நாடுகள்பங்கேற்றபோட்டியில் பெண்கள் அணிபதக்கம் தங்கப் வென்றுள்ளோம், சீனியர் ஆண்கள் பிரிவு வெள்ளிபதக்கம் வென்றுள்ளனர். இதற்கு முன்பு நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஸ் போட்டியில் சீனாவில் நடைபெற்ற போட்டியில் நாங்கள்வெண்கலம் பெற்றோம். தற்போது தங்கம் வென்றுள்ளது. அனைவருக்கும் மகிழ்ச்சியாக உள்ளது என்று கூறினார்.

# சிவகங்கை மாவட்டம் கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் பயனடைந்த தொழிலாளர்கள் முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி

தமிழ்நாடு முதல்வர் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, பயன்பெறும் வகையில் தொலை நோக்கு பார்வையுடன் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதில் குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, தொழில் முனைவோர்களை உருவாக்கி வருகிறார்கள்.



அதன்படி, மாவட்ட தொழில் மையத்தின் மூலம் தொழில் வளர்ச்சிப் பகுதிகள் கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோர்களை ஆற்றல் மிக்க தொழில் முனைவோர்களாக உருவாக்கிடும் நோக்கில், அவர்களுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி மற்றும் மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவியும் வழங்கி, புதிய தொழில் நிறுவனங்கள் உருவாக்குவதே தமிழ்நாடு முதல்வர் அவர்களின் நோக்கமாகும்.


அந்தவகையில், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் மாவட்ட தொழில் மையம் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் , புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் தொழில் முனைவோர்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி செய்து தர விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தொழில் முனைவோர்களின் விருப்பத்திற்கேற்ப வங்கிகளுக்கும் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது.மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி என்பது தனிமனிதரின் வளர்ச்சியை பொறுத்து அமைகிறது என்பதை கருத்தில் கொண்டு, பொருளாதார ரீதியாக பயன்பெறும் அடிப்படையில் அதற்கான திட்டங்களை தமிழ்நாடு முதல்வர் தமிழகத்தில் புதிதாகவும் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில், தமிழ்நாடு முதல்வர்அவர்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை சார்பில் கைவினை கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், கைவினை கலைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கிடும் நோக்கத்துடனும் கலைஞர் கைவினை திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். கலைஞா வகவிலனத்திட்டம் கலைஞர் கைவினைத் திட்டம். இத்திட்டமானது, குடும்பத்



தொழில் அடிப்படையில் இல்லாமல், 25 கைவினை கலைகள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் ருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் புதிய தொழிலை தொடங்கவும், செய்யும் தொழிலை நவீன வடிவில் மேம்படுத்தவும் கடன் உதவிகளும், திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், கலைஞர் கைவினைத்திட்டத்தில் ரூ.3 லட்சம் வரை வங்கி கடன் உதவியும், திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் மானியத்துடன் (அதிக பட்சமாக ரூ.50 ஆயிரம் வரை) வட்டி மானியமும் வழங்கப்படும். இத்திட்டத்தில், விண்ணப்பிக்க 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். தமிழகம் முழுவதும் உள்ள 8,951 கைவினைத் தொழில் முனைவோர்களுக்கு ரூ.170 கோடி மதிப்பீட்டிலான கடன் ஒப்பளிப்புகள் மற்றும் ரூ.34.00 கோடி மதிப்பீட்டிலான மானியத்திற்கான ஆணைகளும் வழங்கப்பட்டது.




சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் மேற்கண்ட திட்டத்தின் கீழ் மொத்தம் 259 கைவினை கலைஞர்களுக்கு ரூ.36545 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், 68 பயனாளிகளுக்கு ரூ.53.6 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் முன்முனை மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் பயனடைந்த சிங்கம்புணரி வட்டாரத்தை சேர்ந்த கைவினை தொழிலாளி சத்தியமூர்த்தி தெரிவிக்கையில், எனது பெயர் சத்தியமூர்த்தி. நான் சிங்கம்புணரி பகுதியில் வசித்து வருகிறேன். நான் தென்னை நார் கயிறு திரிக்கும் தொழில் மேற்கொண்டு வருகிறேன்.

இத்தொழிலின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயினை கொண்டு, எனது குடும்பத்தின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து வருகிறேன்.

இந்நிலையில், எங்களது பகுதியில் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் வட்டார அளவிலான தொழில் ஊக்குவிப்பு முகாம் நடத்தப்பட்டது. அம்முகாமில், நான் கலந்து கொண்டேன். அதில், மாவட்ட தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவி திட்டங்கள் ஆகியன குறித்து துறை சார்ந்த அலுவலர்கள் எடுத்துரைத்தனர். அச்சமயம், தமிழக அரசின் கலைஞர் கைவினைத் திட்டம் குறித்து நான் முழுமையாக



அறிந்து கொண்டேன். அத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு மாவட்ட தொழில் மையத்தின் துறை சார்ந்த அலுவலர்களை அணுகினேன். அவர்களின் உரிய வழிகாட்டுதலின்படி, எனது தென்னை நார் கயிறு திரிக்கும் தொழிலினை விரிவுபடுத்து வதற்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து, கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தேன். அதன்படி, எனது விருப்ப வங்கியின் கிளைக்கு எனது விண்ணப்பம் பரிந்துரைக்கப்பட்டதன் அடிப்படையில், எனது நிறுவன திட்ட மதிப்பீட்டுக்கான கடன் உதவி தொகை ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்) உடனடியாக வங்கியின் சார்பில் வழங்கப்பட்டது.மேலும், தமிழக அரசின் கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த பயனாளியான எனக்கு 25 சதவீதம் முன்முனை மானியமான ரூ.50,000/-மும் (ரூபாய் ஐம்பாதாயிரம்) எனது வங்கி கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

என்னை போன்ற கைவினை தொழிலாளர்களது தொழில் நிறுவனத்தை சிறப்பாக அமைத்து, தொழில் புரிவதற்கென அடிப்படையான திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என கைவினைத் தொழிலாளி சத்தியமூர்த்தி மனம் நெகிழ தெரிவித்தார்.


**தொகுப்பு**
**மு.ராஜசெல்வன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சிவகங்கை மாவட்டம்.**

# அழகர்கோவில் ஆடி பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



**மேலூர், ஆக. 02-**
108 திவ்யதேசங்களில் ஒன்றானது மதுரையை அடுத்த மேலூர் அருகே உள்ள அழகர்கோவில், கள்ளழகர் கோவில் ஆகும். இங்கு நடைபெறும் திருவிழாக்களில் ஆடி மாதம் நடைபெறும் ஆடி பெருந்திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இந்த திருவிழாவிற்காக நேற்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து நேற்று இரவு அன்ன வாகனத்தில் கள்ளழகர் எழுந்தருளி வீதியுலா நடைபெறுகிறது. இரண்டாம் நாள் இன்று திருவிழா ஆகஸ்ட் 2ந் தேதி சனிக்கிழமை காலை தங்க பல்லக்கிலும் இரவு சிம்மாசனத்தில் கள்ளழகர் எழுந்தருளி வீதியுலா நடைபெறுகிறது. 3-ம் நாள் திருவிழா ஆகஸ்ட் 3ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை தங்க பல்லக்கிலும் இரவு ஹனுமார் வாகனத்தில் கள்ளழகர் எழுந்தருளி வீதியுலா நடைபெறுகிறது. நான்காம் நாள் திருவிழா ஆகஸ்ட் 4ந் திங்கட்கிழமை காலை தங்க பல்லக்கிலும் இரவு கருட வாகனத்தில் கள்ளழகர் எழுந்தருளி வீதியுலா நடைபெறுகிறது. ஐந்தாம் நாள் திருவிழா ஆகஸ்ட் 5ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை 6.45 முதல் 7.30 மணிக்குள் கள்ளழகர் பெருமாள் தங்க பல்லக்கில் புறப்பாடாகி மதுரை சாலையில் உள்ள மறவர் மண்டபத்தில் எழுந்தருளும் நிகழ்வு நடைபெற உள்ளது அன்று இரவு சேஷ வாகனத்தில் எழுந்தருளி திருக்கோயில் புறப்பாடு நடைபெறுகிறது. ஆறாம் நாள் திருவிழா ஆகஸ்ட் 6ந் தேதி - புதன்கிழமை காலை தங்க பல்லக்கிலும் மாலை மோகினி அவதாரத்திலும் இரவு யானை வாகனத்திலும் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் எழுந்தருள்கிறார். ஏழாம் நாள் திருவிழா ஆகஸ்ட் 7ந் தேதி வியாழக்கிழமை காலை சூர்ணோத்ஸவம் இரவு புஷ்ப சப்பரத்தில் கள்ளழகர் எழுந்தருளி வீதியுலா நடைபெறுகிறது எட்டாம் நாள் திருவிழா ஆகஸ்ட் 8ந் தேதி வெள்ளிக்கிழமை

காலை தங்க பல்லக்கிலும் இரவு தங்க குதிரை வாகனத்தில் கள்ளழகர் எழுந்தருளி வீதியுலா நடைபெறுகிறது ஒன்பதாம் நாள் திருவிழா ஆகஸ்ட் 9ந் தேதி சனிக்கிழமை காலை ஆடி பௌர்ணமி அன்று 8:40 மணிக்கு மேல் 8.55 மணிக்குள் கள்ளழகர் திருத்தேர் எழுந்தருளி தேரோட்டம் நடைபெற உள்ளது. அன்று மாலை பத்தினெட்டம்படி கருப்பசாமி சன்னதி கதவுகள் திறக்கப்பட்டு படி பூஜை மற்றும் தீபாராதனை மற்றும் சந்தானம் சாத்துதல் நடைபெறுகிறது. இரவு புஷ்ப பல்லக்கில் அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் எழுந்தருள்கிறார் பத்தாம் நாள் திருவிழா 10-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு தீர்த்தவாரி மற்றும் சப்தாவர்ணம் - புஷ்ப விமானத்தில் எழுந்தருள்கிறார் பதினோராம் நாள் ஆகஸ்ட் 11-ந் தேதி திங்கட்கிழமை உற்சவ சாந்தி பூஜையிடன் திருவிழா நிறைவடைகிறது.விழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் வெங்கடாசலம், துணை ஆணையர் யக்ஞ நாராயணன், உதவி ஆணையர் பிரதீபா, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பாண்டியராஜன், செந்தில்குமார், தக்கார் பிரதிநிதி நல்லதம்பி, கண்காணிப்பாளர்கள் பாலமுருகன், அருணா தேவி, மக்கள் தொடர்பு அலுவலர் முருகன், திருக்கோவில் பணியாளர்கள் செய்துள்ளனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மையில் ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்கிடும் வகையில் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்திற்கும் சென்னை-இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி "மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற பிரச்சார பயணத்தின் ஒருபகுதியாக நேற்று கோவில்பட்டியில் தனியார் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மற்றும் கடலை மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடினார். இதில் முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் செ.ராஜூ, ஆர்.பி.உதயகுமார், சி.விஜயபாஸ்கர், தளவாய் சுந்தரம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



● சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் வைகோ சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பாராளுமன்ற உறுப்பினர் துரை வைகோ ஆகியோர் உடனிருந்தனர்.

# 3-ம் கட்ட சுற்றுப்பயணம்: ஆக. 11-ல் தொடங்குகிறார் எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஆக.02-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வருகிற 11-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை 3-ம் கட்ட சுற்றுப்பயணத்தை தொடங்குகிறார்.

இதுகுறித்து அ.தி.மு.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி 'மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற உன்னத நோக்கத்தை லட்சியமாகக் கொண்டு, 11.8.2025 முதல் 23.8.2025 வரை 3-ம் கட்டமாக, சட்டமன்றத் தொகுதி வாரியாக, 'எழுச்சிப் பயணம்' - தொடர் பிரசார சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்கள்.

எடப்பாடி பழனிசாமியின் எழுச்சிப் பயணத்திற்கான ஏற்பாடுகளை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். 'எடப்பாடி பழனிசாமியின் எழுச்சிப் பயணத்தின்' போது சம்பந்தப்பட்ட கழக மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பொறுப்பாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும், பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசு விளம்பரங்களில் அரசியல் தலைவர்கள் பெயரை பயன்படுத்த உயர்நீதிமன்றம் தடை

சென்னை, ஆக.02-

அரசு புதிதாக தொடங்க உள்ள, அமலில் உள்ள திட்டங்கள் குறித்த விளம்பரங்களில் அரசியல் தலைவர்களின் பெயரையோ, முன்னாள் முதல்வரின் புகைபடத்தையோ பயன்படுத்தக் கூடாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'உங்களுடன் ஸ்டாலின் திட்டம்' குறித்த விளம்பரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி புகைப்படத்தை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் எனவும், முதல்வரின் பெயரை பயன்படுத்த தடை விதிக்கவும் கோரி அ.தி.மு.க. மக்களவை உறுப்பினர் சி.வி.சண்முகம் தரப்பில் மனு தாக்கல் செய்யபட்டது.

இந்த வழக்கில், தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் பிறப்பித்த உத்தரவில், உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், அரசு விளம்பரங்களில் முதல்வரின் புகைப்படத்தை பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், கட்சியின் கொள்கை தலைவர்களின் புகைப்படத்தையோ, முன்னாள் முதல்வர் புகைப்படத்தையோ பயன்படுத்துவது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது எனத் தெரிவித்துள்ளது.

அரசு திட்டத்தின் பெயரில், அரசியல் தலைவர்களின் பெயர்களை பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. அதேபோல, ஆளும் கட்சியின் பெயர், சின்னத்தை பயன்படுத்துவது உச்ச நீதிமன்றம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுக்கு விரோதமானது எனத் தெரிவித்துள்ளது.

அதேசமயம், 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் முதல்வர் பெயரை பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க. அளித்த புகாரை தேர்தல் தேர்தல் ஆணையம் விசாரிக்க இந்த வழக்கு தடையாக இருக்காது என தெளிவுபடுத்தி, வழக்கு விசாரணையை ஆகஸ்ட் 13-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# வாரணாசியில் ரூ.2,200 கோடியில் திட்டங்கள்: பிரதமர் இன்று தொடங்கி வைக்கிறார்

புதுடில்லி, ஆக.02-

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் சுமார் ரூ.2200 கோடி மதிப்பிலான பல மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், நிறைவடைந்த திட்டங்களையும் பிரதமர் மோடி இன்று தொடங்கி வைககிறார்.



இது குறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்; வாரணாசியில் சாலை இணைப்பை மேம்படுத்துவதற்காக, பிரதமர் பல முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டுகிறார்.

ஸ்மார்ட் வினியோகத் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மற்றும் ரூ.880 கோடிக்கு மேல் மதிப்புள்ள மின்சார உள்கட்டமைப்பை நிலத்தடியில் அமைக்கும் பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

மேலும், கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நீர்நிலைகளைப் பாதுகாக்க, ராம்குண்ட், மந்தாகினி, ஷங்குல்தாரா உள்ளிட்ட பல்வேறு குளங்களில் நீர் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார், அத்துடன் நான்கு மிதக்கும் பூஜை மேடைகள் நிறுவப்படும்.

கிராமப்புறங்களில் குடிநீர் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 47 கிராமப்புற குடிநீர் திட்டங்களையும் பிரதமர் திறந்து வைக்க உள்ளார்.

மகாமனா பண்டித மதன் மோகன் மாளவியா புற்று நோய் மையம் மற்றும் ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனையில் ரோபோடிக் அறுவை சிகிச்சை மற்றும் சிடி ஸ்கேன் வசதிகள் உள்ளிட்ட மேம்பட்ட மருத்துவ உபகரண நிறுவல்களை பிரதமர் திறந்து வைக்க உள்ளார்.

ஹோமியோபதி கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கும் அவர் அடிக்கல் நாட்டுவார். மேலும், அவர் ஒரு விலங்கு கருத்தடை மையத்தையும் அதனுடன் தொடர்புடைய நாய் பராமரிப்பு மையத்தையும் திறந்து வைப்பார்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




● சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் "செம்மொழியான தமிழ்மொழியாம்" எனும் தலைப்பில் நடத்தப்பட்ட சமூக ஊடகங்கள் சார்ந்த கலைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் செயலாளர் வே.ராஜாராமன், கூடுதல் இயக்குநர் இரா.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காஷ்மீரில் ஆபரேஷன் மஹாதேவ்: 12 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

புதுடில்லி, ஆக.02-

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு இந்திய ராணுவத்தினர் மேற்கொண்டு வரும் ஆபரேஷன் மஹாதேவ் மூலம், கடந்த 100 நாட்களில் 12 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்.,22ம் தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், 26 அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து, இந்திய ராணுவத்தினர் நடத்திய ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலின் மூலம், பாகிஸ்தானில் உள்ள 100 பயங்கரவாதிகள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

அதன்பிறகு, ஜம்மு காஷ்மீரில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளை வேட்டையாடும் பணியை, 'ஆபரேஷன் மஹாதேவ்' என்ற பெயரில் இந்திய ராணுவத்தினர் மேற்கொண்டு வந்தனர்.

அண்மையில், பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதன்மூலம், ஆபரேஷன் மஹாதேவ் மூலம், கடந்த 100 நாட்களில் இந்திய ராணுவத்தால் தேடப்பட்டு வந்த 12 முக்கிய பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் 6 பேர் பாகிஸ்தான் பயங்கரவாதிகள். இவர்கள் ஜம்மு காஷ்மீரில் நடந்த பல்வேறு பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு முன்பு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில், 110 முதல் 130 பயங்கரவாதிகள் தங்கியிருந்த 42 பயங்கரவாத முகாம்கள் செயல்பட்டு வந்ததாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

அதேபோல, காஷ்மீரில் சுமார் 70 முதல் 75 பயங்கரவாதிகளும், ஜம்மு, ரஜோரி மற்றும் பூஞ்சில் 60 முதல் 65 பயங்கரவாதிகளும் பதுங்கியிருந்ததாக உளவுப்பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.



● மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட விளாங்குடி 20-வது வார்டு காமாட்சி நகர் பகுதியில் கவுன்சிலர் நாகஜோதிசித்தன் தலைமையில் புதிய நியாய விலைக்கடையினை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா,எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பரவை ராஜா, பேராசிரியர் ஜெயபால், கே.ஜெயவேல், வி.பி.ஆர்.செல்வகுமார், சோலைராஜா, பகுதி செயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன், ஒட்டுரணி திருமுருகன், எம்.ஏ.நாசர், திடீர்நகர் பாலா மற்றும் பி.என்.சுந்தர்ராஜன், சேகவன், கறிக்கடை மலைச்சாமி, விஜயகுமார், நாராயணன், ஜஸ்டிஸ்ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.



● திருநெல்வேலி புறநகர் மாவட்டத்தில் ஆகஸ்ட் 2, 4, 5-ம் தேதியில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வருகை தந்து பிரச்சாரத்தில் உரையாற்றும் இடங்களை ஆய்வு செய்து பிரம்மாண்ட வரவேற்பு கொடுக்க திருநெல்வேலி புறநகர் மாவட்ட பொறுப்பாளரும், அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணை செயலாளருமான டாக்டர் சரவணன் மற்றும் திருநெல்வேலி புறநகர் மாவட்ட செயலாளர் இசக்கி சுப்பையா ஆகியோர் ஏற்பாடுகள் செய்தனர்.